தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி - XXIV

விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - VI

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2025 திருவள்ளுவர் ஆண்டு 2056

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண். 63

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி –XXIV

(விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -VI)

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்.63

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி –XXIV

(விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -VI)

பதிப்பாசிரியர்

முனைவர் **கோ.சசிகலா**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை – 600 008

2025 – திருவள்ளுவர் ஆண்டு 2056

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**TAMILNADU INSCRIPTIONS - VOL. XXIV** (Villupuram District Inscriptions - Vol. VI)
Editor	:	G. Sasikala
Copyright	:	Tamil Nadu State Dept. of Archaeology
Subject	:	Epigraphy
Language	:	Tamil & English
Edition	:	First
Publication No.	:	346
Year	:	2025
Type Point	:	12
No. of Pages	:	328
No. of copies	:	1000
Paper Used	:	80 Gsm Maplitho
Publisher	:	**Tamilnadu State Department of Archaeology,** Tamil Valarchi Valagam, Thamizh Salai, Egmore, Chennai - 600 008.
Printed by	:	Evershine Multipurpose Co-operative Society Ltd., No. 32. Koya Arunagiri Ist Street, Royapettah, Chennai-600 014
Price	:	Rs. 220 /-

உள்ளடக்கம்

	பதிப்புரை	...	i
	முன்னுரை	...	iii
1.	மேலச்சேரி	...	1
2.	சிங்கவரம்	...	2
3.	நல்லாள் பிள்ளை பெற்றாள்	...	25
4.	திருவம்பட்டு	...	32
5.	தேவனூர்	...	34
6.	எய்யில்	...	65
7.	செவலப்புரை	...	79
8.	மலையனூர்	...	87
9.	அனந்தபுரம்	...	88
10.	தேவதானம் பேட்டை	...	98
11.	கண்ணாலம்	...	99
12.	மேல்சித்தாமூர்	...	100
13.	கள்ளப்புலியூர்	...	138
14.	வீரமாநல்லூர்	...	148
15.	தொண்டூர்	...	156
16.	அகலூர்	...	160
17.	கங்கபுரம்	...	168
18.	திருவத்திகுன்னம்	...	172
19.	முன்னூர்	...	187
20.	பெருவளூர்	...	253
	நிழற்படங்கள்	...	261
	சொல்லடைவு	...	305

இ. க. ஆண்டறிக்கை - இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை

தெ. க. தொ. - தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி

ARE. - Annual Reports on (South) Indian Epigrapy

EI. - Epigraphia Indica

SII. - South Indian Inscriptions

முன் அட்டை : கொற்றவை, சிங்கவரம், விழுப்புரம் மாவட்டம்

பின்அட்டை : நிசீதிகை கல்வெட்டுகள், திருநாதர் குன்று , விழுப்புரம் மாவட்டம்.

த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ)

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை,
சென்னை - 600 008

பதிப்புரை

வரலாற்றினை எழுதுவதற்கு துணைபுரியும் சான்றுகளாகத் திகழ்பவை அகழாய்வுத் தொல்பொருட்கள், கல்வெட்டுகள், காசுகள், செப்பேடுகள், வரலாற்றுச்சின்னங்கள், இலக்கியங்கள் போன்றவையாகும். வரலாற்றினை அறிய உதவும் கல்வெட்டுகளைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து, நூலாக வெளியிடும் பணியினைத் தனது முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகிறது.

இத்துறைக் கல்வெட்டுப்பிரிவு வாயிலாக இதுவரை 9312 கல்வெட்டுகள் 62 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 2025-ஆம் ஆண்டில் இந்நூல் கல்வெட்டு வரிசை எண் 63- ஆவது நூலாக வெளியிடப்படுகின்றது. விழுப்புரம் மற்றும் பிற ஊர்களிலிருந்தும் படியெடுக்கப்பட்ட 202 கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஊர் கல்வெட்டுகள் மேலச்சேரி, சிங்கவரம், நல்லாள் பிள்ளை பெற்றாள், திருவம்பட்டு, தேவனூர், எய்யில், செவலப்புரை, மலையனூர், அனந்தபுரம், தேவதானம் பேட்டை, கண்ணாலம், மேல்சித்தாமூர், கள்ளப்புலியூர், வீரமாநல்லூர், தொண்டூர், அகலூர், கங்கபுரம், திருவத்திகுன்னம், முன்னூர், பெருவளூர் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்நூல் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி XXIV (விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -VI) என்னும் தலைப்பில் வெளிவருகின்றது.

இக்கல்வெட்டுகளைப் படித்துத் திருத்திய முனைவர் கோ. சசிகலா அவர்களுக்கும், இக்கல்வெட்டுகளைப் பதிப்பித்து நூலாக வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்ட, உதவி இயக்குநர் (தொழில் நுட்பம்) திருமதி கி. பாக்கியலட்சுமி அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை D.T.P. மற்றும் அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திரு. மு. சக்திவேல் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும், பெரும் முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முதன்மைச் சான்றாக உள்ள இக்கல்வெட்டு வாசகங்களை ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் பயன்படுத்தி இப்பகுதியின் வரலாற்றினை எழுதுவதற்கு உதவும் என்ற நோக்கில் இந்நூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ)

முன்னுரை

பிரிக்கப்படாத விழுப்புரம் மாவட்டம் நடுநாட்டின் உள்மையப் பகுதியாக விளங்குகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் உள்ள கோயில் கல்வெட்டுகள் இந்தத் தொகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன. இவை தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் அமைந்துள்ளன. தமிழ் மொழிக் கல்வெட்டுகள் சோழர், பாண்டியர், சம்புவராயர், விஜயநகரர் ஆகிய அந்தந்த பேரரசுகளின் காலகட்டத்தில் தமிழகத்தில் வழங்கி வந்த எழுத்தமைதியில் பொறிக்கப்பட்டுள்ளன. சமஸ்கிருதக் கல்வெட்டுகள் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் உள்ள மேல்சித்தாமூர் சமணக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டுகள் ஓரிரு வரிகளில் கிரந்த எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ளன.

இந்தக் கல்வெட்டுத் தொகுதியில் செஞ்சி வட்டத்தில் உள்ள சிவன் மற்றும் விஷ்ணு கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. மேலும் மேல்சித்தாமூர் சமணக் கோயில் தளவானூர் குடைவரைக் கோயில் ஆகியவற்றில் உள்ள கல்வெட்டுகளும் தொகுப்புகளும் அமைகின்றன. இத்தொகுதியில் இடம் பெறும் கல்வெட்டுகளின் மைப்படிகள் மிகவும் சிதைந்த நிலையில் இருந்தமையால் அவற்றைக் கையாள்வதில் சிக்கல் ஏற்பட்டது. எனவே மின்னுருவாக்கம் செய்யப்பட்ட மசிப்படிகளின் ஒளிப்படங்கள் மூலம் பெரும்பாலான கல்வெட்டுகள் வாசிக்கப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகளை சரிபார்க்க நேரடியாக மேல்சித்தாமூர் போன்ற கோயில்களுக்கு சென்று வாசிப்பு செய்யப்பெற்றது.

திருநாதர் குன்று வட்டெழுத்துக் கல்வெட்டு

செஞ்சிப்பகுதியில் உள்ள கல்வெட்டுகள் இத்தொகுதியில் கி.பி. நான்காம் நூற்றாண்டு கல்வெட்டான திருநாதர்குன்று கல்வெட்டிலிருந்து தொடங்குகிறது. திருநாதர்குன்று கல்வெட்டு தமிழி எழுத்துமுறையிலிருந்து வட்டெழுத்திற்கு தமிழ் எழுத்துக்கள் மாறுகின்ற காலத்தில் பொறிக்கப்பட்டதாகும். இந்த வட்டெழுத்துக் கல்வெட்டு, சந்திரநந்தி என்ற சமணத் துறவி ஐம்பத்தேழு நாட்கள் சல்லேகனை நோன்பிருந்து ('சல்லேகானா' உயிர் நீத்ததைக் குறிப்பிடுகிறது. சல்லேகனை என்பது உண்ணாநோன்பிருந்து உடல் மெலிந்து உயிர் துறப்பதைக் குறிக்கும்.

இக்கல்வெட்டு முதிர்ந்த நிலை தமிழ் பிராமி எழுத்து வடிவம், வட்டெழுத்தாக உருமாறிய காலகட்டத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு என்ற பெருமையைக் கொண்ட கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் முதன் முதலாக "ஐ" என்னும் எழுத்து வடிவம் முதன் முதலாகக் கண்டறியப்பட்டது. இதற்கு முன்பு "ஐ" என்ற எழுத்துப் பயன்படுத்தப்படவில்லை. சூலம் போன்ற குறியுடைய "ஐ" என்னும் எழுத்துடன் இக்கல்வெட்டு தொடங்குகிறது. இக்கல்வெட்டில் மெய்யெழுத்துகள் புள்ளியிட்டு எழுதப்பட்டுள்ளன.

திருநாதர்குன்றின் மற்றொரு கல்வெட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. முப்பது நாள் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த இளைய படாரருக்கு எடுக்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டானது தமிழ் வடிவிலான கல்வெட்டாகும். ஒரே காலகட்டத்தில் உண்ணாநிலை இருந்து உயிர் துறந்த கல்வெட்டுகள் ஒன்றும் வட்டெழுத்தில் மற்றொன்று தமிழ் வரிவடிவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டும் இத்தொகுதியில் இடம் பெறுகிறது.

முதலாம் மகேந்திரவர்மன்

இத்தொகுதியில் முதலாம் மகேந்திரவர்மப் பல்லவனின் தளவானூர் குடைவரைக் கல்வெட்டு இடம் பெற்றுள்ளது. விழுப்புரம் - செஞ்சி நெடுஞ்சாலையில் விழுப்புரத்திலிருந்து 28 கி.மீ. தொலைவில்கிராமப்புறச் சாலையில் 6கி.மீ. பயணித்து தளவானூர் சிற்றூரைஅடையலாம். தளவானூர் குடைவரைக் கோயில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்ம பல்லவ மன்னனால் (கிபி 600 - 630) குடைவிக்கப்பட்டது. தெற்கு முகமாக 32 அடிநீளத்தில்தரைமட்டத்திலிருந்து 3.5 அடிஉயரத்தில்அமைக்கப்பட்டுள்ளது. “தொண்டையந்தார் வேந்தன் நரேந்திரப்போத்தரையன் வெண்பேட்டின் தென்பால் மிகமகிழ்ந்து - கண்டான் சரமிக்க வெஞ்சிலையான் சத்ருமல்லேசமென்(று) அரனுக்கிடமாக அன்று”என்பது தமிழ்க் கல்வெட்டாகும். இக்குடைவரையில் பல்லவர் காலத்தைய கல்வெட்டுகள் மூன்றும் பிற்காலத்தைய கல்வெட்டு ஒன்றும் காணப்படகிறது. குடவரையின் வெளிப்புறத் தூணொன்றில் பல்லவ கிரந்த கல்வெட்டு உள்ளது. நரேந்திரன் என்பவன் சத்ரு மல்லேசுவரம் எனும் பெயரில் குடைவரை கட்டியதைக் குறிப்படுகிறது.

பல்லவ கிரந்த கல்வெட்டு

"தண்டோநத நரேந்த்ரநோ
நரேந்த்ரநை ஸகரிதம் ஸத்ரு மல்லேந ஸைலேஸ்மிந்
ஸத்ரு மல்லேஸ்வராலயம்"

இதே காலக்கட்டத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு முகப்புத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. செல்லன் சிவதாசன் எனபான் சொன்னதாக இக்கல்வெட்டு முடிகிறது. கிரந்தக் கல்வெட்டு கூறும் அதே தகவலைத்தான் இதுவும் கூறுகிறது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் வெண்பெட்டு ஊரினைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.

தமிழ் கல்வெட்டு

"தொண்டையந்தார்வேந்தன் நரேந்திரப் போத்தரைசன் வெண்பெட்டின்பால் மிகமகிழ்ந்து கண்டான் சரமிக்க வெஞ்சிலையின் ஶத்துரு மல்லேஶ்வ ராலையமென்றர ணுக்கிடமாக ணங்கு இவ்வூரமும் ம மங்கலவன் செல்லன் சிவ தாஸந் சொல்லியது"

வெளிப்புறத் தூணொன்றில் மூன்றாம் நந்திவர்மனின் பதினைநதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகிறது (Ref. vol. 12). இக்கல்வெட்டு தானம் அளித்தவரை வெண்பெட்டு தளி உடையை....." எனக் குறிப்பிடுகிறது. சிறிது சிதைந்துள்ளது. "ஸ்வஸ்தி "ஸ்ரீ கோவிசைய நந்தி விக்கிரமப் பரு(மக்கு) யாண்டு பதினைந்தாவது

வெண்பெட்டு வாழும் தளி உடை(ய) ...... மொடன்னிடைக் கழஞ்சுப் பொன் முதல் கொண்டு இப்பொ"

இரண்டாம் நரசிம்மவர்மன்

அடுத்ததாக காலவரிசையில் முதன்மை பெற்ற பனைமலைக் கல்வெட்டு. செஞ்சியிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் இருக்கின்றது "பனைமலை". காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டிய இரண்டாம் நரசிம்மவர்ம (கி.பி 695-722) பல்லவன் என்றழைக்கப்படும் இராஜசிம்மனால் கட்டப்பட்டது இந்தக் கோயில். இக்கல்வெட்டுத் தொகுதியில் பனைமலையில் உள்ள ஒரு கிரந்தக் கல்வெட்டு மட்டும் இடம்பெற்றுள்ளது. இக்கல்வெட்டு இராஜசிம்மனின் பட்டப்பெயர்களைத் தாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுபோன்று இம்மன்னனது பட்டப்பெயர்களைத் தாங்கியுள்ள கல்வெட்டுகள் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் மாமல்லபுரம் தருமராச ரதத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நந்திவர்மன்

இம்மன்னனைக் குறிப்பிடும் அகலூரில் உள்ள ஒரு கல்வெட்டு இறந்துபட்ட வீரனைப் பற்றிய கல்வெட்டுடன் நினைவுக்கல்லாக உள்ளது. மேலும் இங்குள்ள இறந்துபட்ட வீரனான கம்பையனார்க்கு வழங்கப்பட்ட நெத்தல்பட்டியாக கொடுக்கப்பட்ட நிலக்கொடையைக் குறிப்பிடும் மற்றொரு கல்வெட்டும் குறிப்பிடத்தக்கது.

முதலாம் ஆதித்த சோழன்

தொண்டைநாடு பரவின கோவிராஜகேசரி என்ற விருதுப் பெயர் கொண்ட முதலாம் ஆதித்த சோழனின் 27-ஆவது ஆட்சியாண்டில் கன்னரதேவர் தேவியார் பொற்பட்டம் ஒன்றை மேல்சேவூர் திருத்தான்தோன்றி ஈசுவரர் கோயிலுக்கு கொடையாக அளித்துள்ள கல்வெட்டு காலத்தால் முந்தைய சோழர்காலக் கல்வெட்டாக அமைந்துள்ளது.

முதலாம் பராந்தக சோழன்

'மதிரைக்கொண்ட கோப்பரகேசரி' என்ற விருதுப் பெயர் கொண்ட முதலாம் பராந்தகச் சோழனின் 21-வது ஆட்சியாண்டில் மேல்சேவூர் திருத்தான்தோன்றிப் பெருமாள் கோயிலுக்கு நுந்தா விளக்கெரிக்க பாண்டி நாட்டு நம்பிபுரத்துக் கூற்றன் சேனன் சாவாமூவாப் பேராடுகளைக் கொடையாகக் கொடுத்துள்ளார். செஞ்சி வட்டத்தில் உள்ள தொண்டூரில் உள்ள கோயிலுக்கு பள்ளிச்சந்தமாக நிலக்கொடை அளிக்கப்பட்டுள்ள செய்தி இம்மன்னனது 3-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

முதலாம் இராசராச சோழன்

செஞ்சி வட்டத்தில் அமைந்துள்ள மேல்சேவூரில் உள்ள தான்தோன்றி மகாதேவர் கோயிலில் முதலாம் இராசராச சோழனின் 23-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு அக்கோயிலில் ஸ்ரீகாரியம் செய்வார், திருப்பதியம் பாடுவார், நந்தவனத்தாள், ஸ்ரீகரணத்தான், கணக்கெழுதுவான் ஆகியோர்க்கு வழங்கப்பட்ட நெல்லுக்கான அளவைகளைக் குறிப்பிடுகிறது. இதே ஆட்சியாண்டைக் குறிப்பிடும் மற்றொரு கல்வெட்டு சிங்கபுரநாட்டுக் கீழ்வழித் திருத்தான்தோன்றி உடையார்க்கு ஸ்ரீ காரியஞ் செய்கின்ற வடகரை வேசாலிப்பாடி வாகூர் நாட்டுத் தாமநல்லூர்த் தாமமுழான் கொற்றனங்கி க[ண்]டு செய்வித்தபடி திருத்தான்தோன்றி உடையார் தேவதானம்[ே]சவூர்ப்பால்ப் புதுப்பாடி கல்லேரியான

ஸ்ரீ இரவிகுல மாணிக்கபுரமும் மடமும் மடவளாகத்தும் காலும் நாழியும் வட்டி வாணியஞ் செய்வாரால் அனுபவித்து இக்கோயில் மகாதேவர்க்கு வட்டி விகிதம் அளிக்கும்படி கூறுகிறது. இம்மன்னனின் 26-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று அக்கோயிலுக்கு விளக்கெரிக்க வழங்கப்பட்ட கொடையைப் பற்றி குறிப்பிடுகிறது.

திருத்தான்தோன்றியீசுவரர் கோயிலுக்கு இம்மன்னனின் 22-ஆம் ஆட்சியாண்டில் இராஜராஜப் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் உமாபடாரகி தேவியின் திருவுருவத்தை இக்கோயிலுக்கு செய்தளித்துள்ளார். 18-ஆம் ஆட்சியாண்டைக் குறிப்பிடும் மற்றொரு கல்வெட்டு, கோயில் நிலங்களில் வருவாய் தடை பட்டமையால், அதை விசாரித்து மூவேந்த வேளார் சரிசெய்தமையைப் பற்றிக் கூறுகிறது.இம்மன்னனின் 22-ஆம் ஆட்சியாண்டில் திருவம்பட்டு என்னும் ஊரில் எடுப்பித்த தூம்பில் உள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

முதலாம் இராசேந்திர சோழன்

மேல்சேவூரில் உள்ள தான்தோன்றி மகாதேவர் கோயிலில் முதலாம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி கல்வெட்டொன்று காணப்படுகிறது.இம்மன்னனின் 10-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று இக்கோயிலுக்கு நொந்தா விளக்கெரிக்க வழங்கப்பட்ட 96 சாவாமூவாப் பேராடுகளைப் பற்றிய கொடையைக் குறிப்பிடுகிறது. இம்மன்னனின் 31-ஆம் ஆட்சியாண்டில் திருவம்பட்டு என்னும் ஊரில் எடுப்பித்த தூம்பில் உள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

கோப்பரகேசரி

மேல்சேவூரில் உள்ள தான்தோன்றி மகாதேவர் கோயிலில் இம்மன்னனின் 10-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு உள்ளது. ஓய்மா நாட்டு ஆர்க்கராமூர் குடிப்பள்ளி எழுவ நாடவலான் இக்கோயிலுக்கு நுந்தா விளக்கு வைக்க 96 ஆடுகளை கொடையாக கொடுத்துள்ள செய்தியை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இம்மன்னன் முதலாம் இராசேந்திர சோழனாய் இருக்கலாம்.

இம்மன்னனின் 2- ஆம் ஆட்சியாண்டில் மேல்சேவூர் தான்தோன்றி மகாதேவர் கோயிலுக்கு விளக்கெரிக்க பல்லவரையன் அரிஞ்சிகை என்பான் கொடுத்த பொன் கொடையைக் குறிக்கிறது.

இரண்டாம் இராஜேந்திர சோழன்

முதலாம் இராஜேந்திரனின் மகனான இம்மன்னன் தன் அண்ணன் முதலாம் இராசாதிராஜன் தக்கோலப் போரில் இறந்த பிறகு பட்டம் ஏற்கிறான். இம்மன்னனின் 7-ஆம் ஆட்சியாண்டில் சிங்கவரத்தில் உள்ள இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தில் நடைபெற்ற கொலைகளைப் பற்றிய விசாரணைக்கு ஆணையிடுகிறான்.

இரண்டாம் இராஜாதிராஜன்

இம்மன்னனின் 13-ஆம் ஆட்சியாண்டில் மேல்சேவூர் திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார் விட்ட நிலத்தில் இராஜராஜ சம்புவராயர்க்கு அவர்க்குரிய உரிமை நிலத்தை ஊர்ச்சபையார் தந்துள்ளனர்.தேவனூர் திருநாகீசுவரமுடையார் சிவன் கோயிலுக்கு இம்மன்னனின் 2-ஆம் ஆட்சியாண்டில் சந்தி விளக்கு வைக்க மடவிளாக ஆண்டார் 40 பசுக்களை கொடையாக அளித்துள்ளார்.மேல்சித்தாமூரில் உள்ள பார்சுவநாதர்

கோயிலில் இம்மன்னனின் 10-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு பள்ளிச்சந்தமாக நிலம் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

முதலாம் குலோத்துங்க சோழன்

இம்மன்னனின் 45-வது ஆட்சியாண்டு கல்வெட்டொன்று, பள்ளிமினநான வில்லி என்பவன் மனைவி செய்த பிழையால் ஏற்பட்ட பகை தீர கோயிலுக்கு நுந்தா விளக்கு வைக்க 32 பசுக்களை கொடுக்கச் செய்தமையைக் குறிப்பிடுகிறது. சிங்கவரத்திலுள்ள திருப்பன்றிக் குன்றாழ்வார்க்கு நந்தா விளக்குக் கொடையை இம்மன்னனின் 30-வது ஆட்சியாண்டு கல்வெட்டுக் கூறுகிறது. மேல்சித்தாமூர் பார்சுவநாதர் கோயிலில் காணப்படும் இம்மன்னனது கல்வெட்டு நந்தாவிளக்கு கொடையைக் குறிப்பிடுகிறது. செஞ்சி வட்டத்தில் உள்ள பாக்கம் ஊரில் அமைந்துள்ள திருப்பங்கோணி முட்டம் சிவன் கோயிலுக்கும் இம்மன்னனது 43-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இக்கோயிலுக்கு சந்திவிளக்கு கொடையளிக்கப்பட்டமை குறிப்பிடப்படுகிறது.

மூன்றாம் குலோத்துங்க சோழன்

திரிபுவனச்சக்கரவர்த்திகள் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 13-வது ஆட்சியாண்டில், சேவூர் சிவன் கோயிலில் இரண்டு மூவேந்த வேளார்கள் கொடுத்த உறுதி ஆவணத்தின் படி நடப்பேன் என்று உறுதி கூறுகின்றனர். அப்படி செய்யவில்லையானால் வன்னியரின் செருப்பையும், கலசப்பானையையும் சுமப்போம் என்று உறுதி கூறுகின்றனர். தேவனூர் திருநாகீசுவர ஆளுடைய நாயனார் கோயிலில் உள்ள இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டு அம்மையப்பன் இராசேந்திர சொக்க சம்புவராயன் என்பவர் பாடிகாவல் உள்ளிட்ட பல வரிகளை விட்டுக் கொடுத்துள்ள செய்தியைக் குறிப்பிடுகிறது.தேவனூர் திருநாகீசுவரமுடையார் சிவன் கோயிலுக்கு இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டில் சந்தி விளக்கு வைக்க முருகங்கிழான் என்பவர் 40 பசுக்களை கொடையாக அளித்துள்ளார். இவரது 3-ஆம் ஆட்சியாண்டில் கள்ளப்புலியூர் திருவகத்தீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு அமுது படைக்கவும், நடராசரையும் தேவியையும் ஊர்வலமாக கொண்டு செல்லவும் நிவந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

செஞ்சி வட்டத்தில் உள்ள பாக்கம் ஊரில் அமைந்துள்ள திருப்பங்கோணி முட்டம் சிவன் கோயிலில் இம்மன்னனின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டொன்று காணப்படுகின்றது. பெருவளூரில் உள்ள கோயிலில் மூன்றாம் குலோத்துங்கனது 18-ஆம் ஆட்சியாண்டு பாடிகாவலைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

மூன்றாம் இராஜராஜன்

தேவனூர் திருநாகீசுவரமுடையார் சிவன் கோயிலுக்கு இம்மன்னனின் 13-ஆம் ஆட்சியாண்டில் நந்தா விளக்கு வைக்க பங்களநாட்டு பிருதிகங்கன் என்பவர் 32 பசுக்களை கொடையாக அளித்துள்ளார்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன்

ஸ்ரீகோச்சடை பன்மரான இம்மன்னனின் 8-ஆம் ஆட்சி ஆண்டில் செவலப்புரையில் உள்ள திருமால் கோயிலுக்கு செஞ்சியை திருவிடையாட்டமாகக் கொடுத்த செய்தி இக்கல்வெட்டுத் தொகுதியில் இடம் பெறுகிறது. மேலும் இவ்வூரில் உள்ள திருவகத்தீசுவரர் கோயிலுக்கு இவ்வூரிலிருந்து வரும் வருவாய் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது.

மாறவர்மன் வீரபாண்டியன்

சிங்கவரம் கோயிலில் இம்மன்னனின் ஆட்சிகாலத்தில் எடுக்கப்பட்ட விழாவைப் பற்றி ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.ஆட்சியாண்டு கல்வெட்டில் சிதைந்துள்ளது. கள்ளப்புலியூரில் உள்ள திருவகத்தீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு திருமண்டபம் செய்வித்த திருப்பணியைக் குறிப்பிடும் 13-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு குறிப்பிடத்தக்கது.

மாறவர்மன் குலசேகர பாண்டியன்

சிங்கவரம் பன்றிக்குன்றாழ்வார் பெருமாள் கோயிலுக்கு அரசன் நலம் பெற இம்மன்னனின் 30-ஆவது ஆட்சியாண்டில் ஊர் நில வருவாயினை இக்கோயிலுக்கு நாட்டவர்கள் அளித்துள்ளனர்.

கோப்பெருஞ்சிங்கன்

13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவ நாட்டையாண்ட சிற்றரசர்களில் ஒருவரான கோப்பெருஞ்சிங்கனின் 4-ஆம் ஆட்சியாண்டில் சிங்கவரம் திருப்பன்றிக்குன்று பெருமானுக்கு நொந்தா விளக்கு வைக்கப்பட்டுள்ளது.

நீலகங்கரையன்

கங்கமன்னன் நீலகங்கரையனின் ஆட்சியாண்டு குறிப்பிடப்படாத கல்வெட்டொன்று விளக்குக் கொடையைக் குறிப்பிடுகிறது.

விஜயநகரர்

இரண்டாம் பிரதாப தேவராயன், பிரதாப தேவராய மகாராயன் ஆகிய விசயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் சிங்கவரம் திருப்பன்றிக்குன்றாழ்வார்க்கு திருவிளக்குக் கொடை அளிக்கப்பட்டுள்ளது. மல்லிகார்ஜுனன் என்னும் விசயநகர மன்னனின் ஆட்சிக்காலத்திலும், விருப்பண்ண உடையார் காலத்திலும் சிங்கவரம் பெருமாள் கோயிலுக்கு திருவிளக்குக்குடியாக சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர். சதாசிவ மகாராயர் ஆட்சியின் போது சக ஆண்டு 1483-இல் சிங்கவரம் பள்ளி கொண்ட பெருமாள் கோயில் பாரிவேட்டை விழாவுக்கு கொடையளித்துள்ளனர். அச்சுததேவராயன் ஆட்சிக்காலமான சக ஆண்டு 1454-இல் பலகைக் கல்வெட்டு ஒன்று நல்லாண் பிள்ளைபெற்றாள் என்னும் ஊரில் கிடைக்கப்பெற்று இக்கல்வெட்டுத் தொகுதியில் இடம் பெறுகிறது.

செஞ்சி வட்டத்தில் உள்ள தேவனூர் என்னும் ஊரில் உள்ள திருநாகீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு வீரபொக்கணன் மகன் வீரக்கம்பண்ணன் ஆட்சியிலும், அரியண உடையார் காலத்திலும் மடப்புறம் இறையிலியாக கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீகணநாயக்கர், மௌரிலிகே தேவமகாராயர் ஆகியோர் ஆட்சியின் போது குழி நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. விருப்பண்ண உடையார் தேவனூர் சிவன் கோயிலுக்கு வரிகளை கொடை அளித்துள்ளார். வீரகம்பண உடையார் எய்யில் சிவன் கோயிலுக்கு நந்தா விளக்கு கொடை வழங்கியுள்ளார். கள்ளப்புலியூரில் உள்ள திருவகத்தீசுவரர் கோயிலுக்கான கொடைகள் பல விசயநகர அரசர்களான புக்கண்ண உடையார், கம்பண உடையார் ஆகியோரால் அளிக்கப்பட்டுள்ளன.

வீரமாநல்லூர் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் நாயக்கர் காலத்தைச் சேர்ந்தவையாகும். இக்கல்வெட்டுகள் முழுமைபெறாமல் காணப்படுகின்றன.

சம்புவராயர்

இராசநாராயண சம்புவராயரின் 10-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று தேவனூர் நாகீசுவரர் கோயிலில் காணப்படுகிறது. இறைவனுக்கு பல வரிகளைக் கொடையாக அளித்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டு திருவாசல், திருமண்டபம், மடைப்பள்ளி, கோபுரம் ஆகியவற்றை கட்டியதாக குறிப்பிடுகிறது. எய்யில் ஊரில் உள்ள இம்மன்னனது கல்வெட்டு ஊர் நிலங்களை தேவதானமாக்கி கோயிலுக்கு கொடையளித்ததைக் குறிப்பிடுகிறது.

உதார குணராமன் என்னும் சம்புவராயர் அரசனின் 4-ஆவது ஆட்சியாண்டில் தேவனூர் இறைவனுக்கு திருநடை, திருவரங்கு ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

செஞ்சி வட்டத்தில் உள்ள அனந்தபுரம் ஊரில் உள்ள வரதராசப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் பெரும்பாலும் 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கோயில் திருப்பணியைக் குறிப்பிடுவன. அங்குள்ள அருணாச்சலேசுவர கோயிலிலும் இதே போன்ற செட்டி மக்களின் திருப்பணிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

மேலும் மேல்சித்தாமூரில் உள்ள பார்சுவநாதர் கோயிலில் உள்ள தூண்களில் இடம்பெற்றுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டுகள் இக்கல்வெட்டுத் தொகுதியில் இடம் பெறுகின்றன. கள்ளப்புலியூர் கோயிலில் இராசநாராயண சம்புவராயரது கொடைக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. வீரநாராயண சம்புவராயரின் 7-ஆம் ஆட்சியாண்டில் சிவபிச்சி என்பவர் சோபான மண்டபத்தைக் கட்டியதையும், தன் மக்களை அடிமைக்காணி ஆக்கியுள்ள செய்தியையும் கள்ளப்புலியூரைச் சேர்ந்த சிவன் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

ஆவியூரில் உள்ள ஒரு கல்வெட்டும், பிரம்மதேசத்தில் உள்ள முழுமை பெறாத கல்வெட்டுகள் மூன்றும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. கங்கபுரத்தில் உள்ள மிஷ்டப்ப நாயக்க மன்னனின் கல்வெட்டு ஒன்று நாயக்க மன்னன் இடையரிடம் புல் வரி வாங்கிய செய்தியைக் குறிக்கிறது.

திருவத்திக்குன்னம் சிவன்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் சிதைந்த கல்வெட்டுகளாக முழுமையான செய்திகளை அறியமுடியாமல் உள்ளன. இக்கோயில் கல்வெட்டுகள் நிலஅளவைகளை குறிப்பிடுவதை மட்டும் அறிய முடிகிறது.மேலும் இவ்வூரின் கண் உள்ள மலைக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளும் மன்னன், ஆட்சியாண்டு ஆகியன சிதைந்த நிலையில் கல்வெட்டுகள் முழுமை பெறவில்லை.

மேற்கண்ட மேலச்சேரி, சிங்கவரம், நல்லாள் பிள்ளை பெற்றாள், திருவம்பட்டு, தேவனூர், எய்யில், செவலப்புரை, மலையனூர், அனந்தபுரம், தேவதானம் பேட்டை, கண்ணாலம், மேல்சித்தாமூர், கள்ளப்புலியூர், வீரமாநல்லூர், தொண்டூர், அகலூர், கங்கபுரம், திருவத்திகுன்னம், முன்னூர், பெருவளூர் ஆகிய 20 ஊர்களில் உள்ள கோயில் கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இதில் இடம் பெற்றுள்ள மேல்சித்தாமூர் கிரந்தக் கல்வெட்டுகளை படிப்பதற்கு உதவிய முனைவர் ர. பூங்குன்றன் அவர்களுக்கு நன்றி.

கோ.சசிகலா

த.நா.அ.தொல்லியல்துறை ***தொடர்எண் : 876/2023***

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 9-ஆம் நூற்.
ஊர்	: மேலச்சேரி	இ.க. ஆண்டறிக்கை	: 284 of 1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XII/115
எழுத்து	: கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 1
அரசு	: -		
அரசன்	: -		

இடம் : மத்தலேஸ்வரர் குடைவரைக் கோயில் அர்த்த மண்டபம் தூண் கல்வெட்டு.

குறிப்புரை : சிங்கபுரியில் உள்ள சிகாரி பல்லவேஸ்வரம் என்று அழைக்கப்படும் இந்த குடைவரைக்கோயிலை எடுப்பித்த மன்னன் சந்திராதித்தியன் ஆவார்.

Summary : It states that this rock cut Siva temple called Śri- Śikhari Pallavēśvaram was caused to be made at Śinhapura by king Chandrāditya, who was a sarvanatha.

கல்வெட்டு :

1. 𑌕𑌾𑌰𑌿𑌤𑌮𑌿𑌦𑌨𑍃𑌪𑌤𑌿𑌨𑌾
2. 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵 𑌨𑌾𑌯𑍇𑌂𑌨𑌾
3. 𑌶𑍍𑌰𑍀𑌶𑌿𑌖𑌰𑌿 𑌪𑌲𑍍𑌲𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑌿𑌤𑌿
4. 𑌶𑍈𑌵𑌨𑍍𑌧𑌾[𑌮] 𑌸𑌿𑌂𑌹𑌪𑍁𑌰𑍇

1. कारितमिदनृपतिना
2. चन्द्रादित्येन सर्वनायें ना
3. श्रीशिस्वरिपल्लवेश्वरमिति
4. शैवन्धा[म] सिङ्पुरे[]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 877/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 15- ஆம் நூற்.
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 224 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/246
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 1
அரசு	: -		
அரசன்	: -		

இடம் : ஸ்ரீரங்கநாதசாமி கோயில் அர்த்தமண்டப கிழக்குச் சுவர் உட்புறச் சுவர்.

குறிப்புரை : மண்டபத்தின் மேற்கூரையை நெற்குன்றத்துத் தலைவன் உருவாக்கினான்.

Summary : 13th century C.E. King's name not mentioned. It mentions that the flooring of the maṇḍapa was made by the uḍaiyār maṇavāḷa Āḻvāṉ Taṇḍ nāṭṭu Brahādarāyaṉ of Neṟkuṉṟam alias Rājachūḍamaṇi nallur in Viḍāl paṟṟu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] இத்திருமண்ட-
2. பத்து தளம் விடால்[பற்று] நெற்குன்-
3. றமான இராசசூடாமணிநல்லூர் உ[டை]-
4. டயார் மணவா[ள*]ஆழ்வான் தண்டதநாட்-
5. டுப் பிரமாதராயன் செய்வித்த[ா*]ன்[||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 878/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 7
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1058
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 227 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/249
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 2
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் இராஜேந்திரன்		
இடம்	: ஸ்ரீரங்கநாதசாமி கோயில் கிழக்குப்புற அதிட்டானம்.		

குறிப்புரை : இராஜராஜ சதுர்வேதிமங்கலத்து சபையார் செய்த கொலைகள் பற்றிய விசாரணை பனையூர் நாடாழ்வான் தெரிந்த வில்லிகளின் தலைவன் கோதண்டன் தேவன் என்பவனை முள்ளூர்ப் பள்ளி காரி முருகன் என்பவன் கொலை செய்து விட்டான். அந்த நிகழ்வை விசாரிக்கும் படி சபைக்கு சோழவேந்தன் ஆணையிட்டான். இந்த வழக்கை விசாரித்த சபையார் இரு நிறத்தார் பகைதீர பள்ளிகொண்ட பெருமாளுக்கு நந்தா விளக்கு வைக்கும்படி தீர்ப்பளித்தனர். மேலும் இரண்டு கொலைகளுக்கும் இதே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

Summary : Chōḻa Rājēndra-II r.y. 7, C.E. It records the judgement of the Brahmin assembly for the several murders witin their *brahmadēya.* The chōḻa king ordered the assembly after investigating the case decreed that a perpetual lamp should be offered to Pallikonda perumal to resolved the enming between the two faction. The same verdict was given for two other murders as well.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*]திருமகள் மருவிய செங்கோல் வளவன் முன்னோர் சே[னை] பின்நதுவாக முன்நெதிரென்று இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு கொல்-
2. [லா]புரத்து ஜ[ய]ஸ்தம்[ப*]ம் நாட்டி எதிரமர் பெறாது எண்டிசை நிகழப் பறைய[து]கறங்க பேராற்றங்கரை கொப்பத் தாஹவமல்ல[னை] அடற்பெருஞ்-
3. [சேனை]யெல்லாம் பொருது பாரது நிகழப் பசும்பிணமாக்கி ஆஹவமல்லன் புறக்கிட்டோட அவனானையுங் குதிரையும் பெண்டிர் பண்டாரமு மொட்-
4. [ட்டகநி]ரைகளம் விஜவமுங் கைக்கொண்டு விஜெயாபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருநருளிய கோப்பரகேஸரிவர்மரான உடை-

5. [யார்*] ஸ்ரீராஜெந்த்ரதெவற்கு யாண்டு எ ஆவது ராஜெந்த்ர சோழ வளநாட்டு பனையூர் நாட்டு ஸ்வஹஸ்தெய ஜனியூர் ஸ்ரீராஜராஜ சதுர்வ்வெதிமங்கலத்து பெரு-

6. [ங்குறி]ப் பெருமக்களோம் இய்யாட்டை ரெஷநாயற்று சுவாவக்ஷத்து திங்கள் கிழமையு த்ரி தியையும் பெற்ற திருக்கேட்டை நான் பகல் நமக்கு மூலதெ

7. . . . . நாள் ஸ்ரீராஜராஜ விண்ணகர் ஆழ்வார் திருமுற்றத்திலேய் கூடி நம்மை உடைய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீராஜெந்த்ரதெவர் திருவாய்மொழிந்தருள

8. . . . . பரிபாலிக்கின்ற நம்பிகொட்டி சுதிராத்த்யாஜியாரும் இருக்கப் பணித்த எழுத்து நம்மூர்ப்பிடாகை முள்ளூர் பள்ளி காரி முருகநான உத்தமசோழ

9. . . . . .[னை]யூர் நா[ட]ாழ்வான் தானமடை ஜனநாதத்தெரிஞ வில்லிகளுக்கு நாயகங் கோதண்டன் தேவநாந எதிரிலிசோழக் கற்பூண்டி நாடுடையானை-

10. க்குத்தின [ப]கை கெடத் திருப்பன்றிக்குன்றில் பள்ளிகொண்டருளுகிற வாரஹஸ்வாமிகளுக்கு வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு விட்ட வெள்ளாடு

11. தொண்ணூற்றாறும் வேட்டையில் பட்ட பள்ளிசாத்தன் சூற்றிக்கு ஆகப் பல பள்ளிகள் வைத்த திருநுந்தாவிளக்கு காலுக்கு விட்ட வெள்ளாடு இரு

12. . . . . னாலும் ஸ்ரீவயிஷ்ணவர் பலரையு மிரஹு வைத்த திருநுந்தாவிளக்கு அரைக்காலுக்கு விட்ட வெள்ளாடு பன்னிரெண்டும் மன்றாடி குப்பை திருவரங்கன் வைத்த திருநுந்தாவிள[க்]

13. . . . . ரக்காலுக்கு விட்ட வெள்ளாடு பன்னிரண்டும் நம்மூர்ப் பிடாகை அம்பூர்ப்பள்ளி வைகுந்தன் பிச்சநான ராஜராஜப் பெரியரையன் தான் ஆமூரு[டையான்] பட்டன் விச்சாதி

14. . . . . ர ராஜாயிராஜத் திருமுனைப்பாடி நாடாழ்வானையும் இவன் தம்பி பட்டன் மாதேவனையும் படக் குத்தினமையில் இவர்களை மகன்மைக்கொண்ட பள்ளி எழுவன்

15. . . . . [கரிகா]ல சோழ ஆமூர் நாடாழ்வாநு ஜம்பிமாரும் இப்பகையென்று கொள்ளப் பகை தீர்வதற்கு வைத்த திருநுந்தாவிளக்கு இரண்டுக்கு விட்ட வெள்ளாடு நூ-

16. . . . . ந்நாதித்தவற் செல்[ல]க்க[டவன]வாக ஸிலாலெகெ செய்வித்தோம் பெருங்குறிப் பெருமக்களோம் கரைப்போஜ பணித்தார் ஸ்ரீகுந்தவைச்சேரி வா-

17. . . . . [செ]ஸாஜயாஜியார் பணியால் எண்ணாயிரப் பெருங்காவிதி எழுத்து

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 879/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 226 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/248
எழுத்து	: கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 3
அரசு	: பாண்டியர்		
அரசன்	: மாறவர்மன் வீரபாண்டியன்		

இடம் : ஸ்ரீரங்கநாதசாமி கோயில் அர்த்தமண்டபம் கிழக்கு அதிட்டானம், பத்மம்.

குறிப்புரை : இராசராசபுரத்துத் தலைவன் அரசன் நன்மைக்காக ஒரு திருவிழாவை எடுப்பித்தான். அந்தத் திருவிழாவிற்காகவும், வழிபாட்டுப் பொருட்களுக்காகவும் பல்லவன் பட்டு என்ற ஊரை திருவிடையாட்டமாகக் கொடுத்துள்ளான். ஆவணத்தில் சாட்சிக் கையெழுத்து இட்டவர்கள் பலர்.

Summary : Pāṇḍiya, Māṟavarmaṉ Vīrapāṇḍiyaṉ. r.y. It recods the conducting of a festival for the welfare of the king the chief of Rājarājapuram. For this festival he donated the village Pallvaṉpaṭṭu many people signed the document.

கல்வெட்டு :

1. . . . .[திரு]வாய்க் கேழ்வியும் முன்னாகக் கோமாறபன்மர் திருபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரபாண்டியதேவற்கு யாண்டு
2. . . . . வசஷத்து ஸஷூமியும் புதன்கிழமையும் பெற்ற திருவோணத்து நாழ் செயன் கொண்ட சோழமண்டலத்துப் பல்குன்றக்கோ-
3. . . . .[சி]ங்கபுரத்துத் திருப்பன்றிகுன்றில் நாயனார்ப் பன்றி ஆழ்வார்க்கு இம்மண்டலத்து இராசராசபுரத்து நந்தம்பாக்கி
4. . . . . ட எழுந்தருளப் பண்ணுவித்த உகஸவம் எழுந்தரு(ா)ளும் நாயனார் தேவப் பெருமாளுக்குச் செஞ்[சி]ம(லை)
5. . . . .[பெ]ருமாள் திருமேனிக்கு [நன்]றாக அமுதுபடி சாத்துப்படிக்கும் திருநாள் எழுந்தருளுகைக்கு மற்றுள்ளிட்
6. . . . . லாகச் செறுவளூர் பற்றில் பல்லவன்பட்டு நாற்பாற்கெல்லையும் இவ்வெல்லையுட்பட்ட நஞ்
7. . . . . வடை மரவடை குளவடை தறியிறை தட்டார்பாட்டம் காசாயமும் உட்பட மற்றும் இவ்வூர் எல்லை

8. . . . . .நாமத்துக்காணியாக விட்டோம் இத்திருவிடையாட்டம் அநுராதித்யவரையா[ய்*] இறையிலியாக
9. இப்படிக்குக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டித் திருவாழிக்கல்-
10. (ல்)லும் நாட்டிக்குடுத்தோம் இந்நாட்டவரோம் ௳ தாயனூர் கோமுழான் எழுத்து
11. தாயனூர் மதுகலங்கிழான் எழுத்து மலையனூர் மாடமுடையான் எழுத்து
12. காங்கயப்பேரையன் எழுத்து
13. அங்கராயன் எழுத்து முத்தளவரையன் எழுத்து
14. விக்கர[*ம] பாண்டியப் பேரையன் எழுத்து
15. பள்ளிக்கட்டுச் சேதிராயன் எழுத்து ௳
16. வில்லவராயன் எழுத்து சம்பூராயப்பேரையன் எழுத்து
17. வாளவராயப் பேரையன் எழுத்து ௳
18. கணிச்சபாக்க முடையான் எழுத்து ௳ நாட்டவர் பணியா
19. [ல்]இருகை மதவாரண இரா[ஜ*]ரா[ஜ*]ப்பிரம[ா*]ராயன் எழுத்து [||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 880/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 4
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1246
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 228 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XII/139
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 4
அரசு	: காடவராயர்		
அரசன்	: கோப்பெருஞ்சிங்கன்		
இடம்	: ஸ்ரீரங்கநாதசாமி கோயில் சோபாணம் (வாயிற்படி).		

குறிப்புரை : கருவிலி என்ற ஊரின் தலைவன் வத்தராயன் மகன் வத்தராயன் நந்தாவிளக்கு எரிக்க முப்பது பசுக்களைக் கொடையாக அளித்தான். பெற்றுக் கொண்டவர்கள் வைகானஸ சூத்திரத்தைப் பின்பற்றுபவர்கள்.

Summary : Pallava Kōpperuñsiṉga r.y. 4, 1246 C.E. It records the gift of thirty cows for burning perpetual lamp one Vattarayar son of Vattarayaṉ who was the chief of Karuvili.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] ஸகலபு[வ]ன சக்ரவத்திகள் ஸ்ரீ
2. அவநிஆளப்பிறந்தான் கோப்பெருஞ்[சிங்*]கதெ-
3. வ[ர்]க்கு யாண்டு ச ஆவது ஸி[ஂஹ]நாயற்று பூவ
4. வக்ஷத்து நாயற்று[க்*]கிழமை த்ரயோதஸியும் திருவோ-
5. ணமும் பெற்ற நாள் திருப்பன்றிகுன்று எம்பெரும-
6. ானுக்கு கருவிலிஉடை[ட]யான் தவஞ்செய்தான்
7. வத்தராயன் ம[க*]ன் ஆன யிளைய பெருமாளான வத்தராயர் வைத்த திரு-
8. னுந்தாவிளக்கு க ன்றுக்கு விட்ட சாவாமூவாப் பெரும்பசு ௩௰
9. இப்பசு முப்பதும் கைக்கொண்டோம் இக்கோயிலி[ல்*] வை-
10. காந[ஸ*]ஸூத்ரத்து ஶாஸ்ருவன் ஆண்டவன் பன்றி ஆழ்வா-
11. னும் ஶாஸ்ருவன் ஆதித்தவில்லி பன்றிஆழ்வா-
12. ன் உள்ளிட்டாரோம் [|*] [ஆதெ]யன் அழகியமண[வாளன்*] [எழுத்து] [|*]
13. காங்கயப்பேரையன் எழுத்து [|*]

14. அங்கராயன் எழுத்து [|*] முத்தளவரையன் எழுத்து [|*]
15. விக்கிர[ம*]பாண்டியப்பேரையன் எழுத்து [|*]
16. பள்ளிக்கட்டுச் சேதிராயன் எழுத்து[|*]
17. வில்லவராயன் எழுத்து[|*] சம்பூராயப்பேரையன் எழுத்து[|*]
18. வாளவராயப் பேரையன் எழுத்து உ
19. கணிச்சபாக்கமுடையான் எழுத்து உ நாட்டவர் பணியா[ல்]
20. இருகைமதிவாரண இரா[ச*]ரா[ச*]ப் பிரமராயன் எழுத்து [||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 881/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 30
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1100-01
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 225 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/247
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 5
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		
இடம்	: ஸ்ரீரங்கநாதசாமி கோயில் கிழக்கு அதிட்டானம் வலது புறம்.		

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழமண்டலத்து விக்கிரமன் சோழவளநாட்டு அரும்பூர் ஊரைச்சார்ந்த பிச்சன் வைகுந்தன் என்பவன் திருப்பன்றிக்குன்றாழ்வார்க்கு நந்தா விளக்கு வைக்க 32 பசுக்களை கொடுத்துள்ளார்.

Summary : Chōḻa Kulōtuṅga-III r.y. 30, C.E. 1101. It records the gift of thirty two cows for burning perpetual lamp by (to god Tiruppaṉrik kuṉrālvar) Piccaṉ Vaikundaṉ alias Jaysinga kulakāla periyār, a resident of Arumbur in Vikramachola vaḷanāḍu in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam.

கல்வெட்டு :

1. [ஸ்வ]ஸ்திஸ்ரீ [||*][புகழ்] மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர் மகட் புணர உரிமையில் சிறஞ மணிமுடி சூடி வில்லவர் குலைதர
2. மீனவர் நிலைகெட ஏனை மன்னவர் இழிதலுற்றலமா திக்க[ை*]னத்து[ந்] தந் சக்கரம் நடாத்தி விஜய[ா*]ஹிஷேகம் பண்ணி வீரஸிஂஹாஸநத்து புவநமுழுதுடை-
3. யாளோடும் வீற்றிருஞருளிய கோராஜகேஸரிவர்ஶரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதெவற்கு யாண்டு ௩௰ ஆவது ஜ-
4. யங்கொண்ட சோழமண்டலத்து வி[க்கிர]மசோழவளநாட்டு அரும்பூ[ர்] இ[ரு]க்கு[ம்]. . . . .ர[பி]ச்சன் வெகுஞனான ஜயசிங்ககுலகால பெரியா[ர்]
5. திருப்பன்றிக்குன்றாழ்வ[ா*]ர்க்கு வைத்த திருநுஞாவிளக்கு ஒன்று ஒன்றுக்கு விட்ட சாவா மூவா பெரும் பசு ௩௰௨ இமுப்பத்திரண்டும் கைக்-
6. கொண்டு சஞிராதிச்சவை . . . . தாக கைக்கொண்டோம் இவாழ்(வாழ்) வானை திருவாராதனை பண்ணும் வைக[ா*]நஸ ஸூ-
7. த்ரத்து காஸ்யபந் சீராமந் . . . . சிங்கபிரான் . . . . . .[க்ருஷ்] . . . . நம்பிஶாதெவந் சிங்கபிராநு வாமநநு முள்ளிட்டோம் ||

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 882/2023*

மாவட்டம்	:	விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	செஞ்சி	வரலாற்று ஆண்டு	:	பொ.ஆ. 5-ஆம் நூற்.
ஊர்	:	சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	:	239 of 1904
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.க.தொ. XVII/262
எழுத்து	:	வட்டெழுத்து	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசு	:	-			
அரசன்	:	-			

இடம் : செஞ்சி மலைக் குகை பாறைத்தளம். திருநாதர் குன்று. சமணக் கல்வெட்டு.

குறிப்புரை : சந்திரநந்தி ஆசிரியர் என்பவர் 57 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து இறந்த செய்தியை தெரிவிக்கிறது.

Summary : 5th century C.E. It records the fast undo death in 57 days, by Chandiranandi Āsiriyar at this place.

கல்வெட்டு :

1. ஐம்பத் தேழன
2. சனந் நோற்ற
3. சந்திரநந்தி ஆ-
4. சிரிகரு நிசீதிகை [||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 883/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 10-ஆம் நூற்.
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 238 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/261
எழுத்து	: வட்டெழுத்து	ஊர்க் கல்வெட்டு எண்	: 7

அரசு : -

அரசன் : -

இடம் : செஞ்சி மலைக் குகை பாறைத்தளம். திருநாதர் குன்று. சமணக் கல்வெட்டு.

குறிப்புரை : முப்பது நாள் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த இளையபடாரர் நினைவுச்சின்ன கல்வெட்டு.

Summary : No King. 10th century C.E. It records the fast unto death in 30 days by Iḷaya Bhaṭāvar at this place.

கல்வெட்டு :

1. முப்பது நாள்ளனசன [நே]ாற்ற
2. இ[ளை]ய படாரர் நிசீதிகை [||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 884/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1386
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 234 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/256
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 8
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: விருப்பண்ண உடையார்		
இடம்	: ஸ்ரீரங்கநாதசாமி கோயில். வராகி சன்னதி அர்த்தமண்டபம் கருவறை வடக்குக் குமுதம்.		
குறிப்புரை	: கலவைப்பற்று நாட்டவரும் சமய முதலிகளும் இக்கோயிலுக்கு பெற்றான் மற்றும் இராமந்தை ஆகிய இருவரையும் திருவிளக்குக்குடியாக நியமித்தனர்.		
Summary	: Vijayanagara Viruppaṇṇa 15th century C.E. It records the making over of Peṟṟāṉ and his brother Tamandai as tiruviḷakkukuḍi to god paṉṟi Āḻvār, by the nāṭṭār and samaiyamudalis of Kavalai paṟṟu.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||*] ஊஹாஊணுமெஸ்வாரந ஹாிராய விஹாடந ஹாஷெக்கு தப்புவராயர் கண்டந ஸ்ரீவீர பொக்கணஉடையரு குமார[ர்*] விருப்பண உடையார்[க்*]கு செல்லாநின்ற சுக்ஷய வருஷ ஆடி மாதமுதல் பெருமா[ள்] பன்றி ஆழ்வ[ா*]ருக்கு திருவிளக்கு குடி ஆக
2. கலவை பற்று நாட்டாரும் சமயமுதலியாருமாக எங்க[ள்] குடியாந பெற்றானையும் இவன் தம்பி ரமாண்டையெயும் சந்திராதித்தவரையும் திருவிளக்கு குடி ஆக விட்டோம் வண்டுவராபதிச் சமைய வேளான் எழுத்து சமையமுதலி எழுத்து[||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 885/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: சகம் 1483
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1562
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 235 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/257
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 9
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: சதாசிவ மகாராயர்		
இடம்	: ஸ்ரீரங்கநாதசாமி கோயில்.		

குறிப்புரை : தூத்தலூர் எல்லம்ம நாயக்கனும் அவன் மக்களும் பள்ளி கொண்ட பெருமாள் பாடி வேட்டை விழாவின் போது செய்யும் வழிபாட்டிற்குக் கொடை அளித்துள்ளனர்.

Summary : Vijayanagara, Satāsiva mahārāyar, 1562 C.E. It records the gift of villages as *dēvadāṉa* by Ciṉṉppa nāyakkar for conducting *Pāḍiveṭṭai* festival in the maṇḍapa at the tank.

கல்வெட்டு :

1. ஸ்ரீவஸஸ்தூ[|*] ஸ்வஸ்தி [||*] ஸ்ரீஐநுஐகாமண்டலேசுர மேதினிமீசுரகண்ட கட்டாரிக சாளுவ அ[ரி]ய ராயவிபாடன் பாஷெக்கு தப்புவ-
2. ராயர்கண்டன் மூவ்வராயரகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் நவகோடி நாராயணன்
3. சதாசிவதேவமகாராயர் பிறுதுவி ராச்சியம் பண்ணி யருளாநின்ற சகாற்த[ம்] சூசாஅயரு யிதின் மேல் செல்லாநின்ற துன்மதி ஸு
4. மகர நாயற்று பூறுவபக்ஷத்து தெசமியும் ரோசணியும் பெற்ற புதவாரத்து நாள் செயங்கொண்ட சோழமண்டலத்து
5. பல்குன்றக்கோட்டத்து சிங்கபொருத வளநா[ட்*] டு செஞ்சி பற்று சிங்கபுரம் பெருமாள் பள்ளி கொண்டபெரு-
6. மாளுக்கு ெ[த]ாடாலம் அமரம் சின்னப்ப னா[ய]க்கர் [விட்ட கி]ராமம் யின்னாட்டு பெருமுகை ப[ற்]று [குடிஆ]ற்றுக்கு வ-
7. டகரை ஆலம்பட்டு கிறாமம் தூத்தலூ[ர்*] எல்லம னாயக்கர் பு[த்ர]ன் [தி]ம்மு னாயக்க[ர்*] குமார[ர்*] மூக்கு னாயக்கர் [தி]ம்மு னாயக்க(ர்)ர் குளக்க-

8. ரை மண்டபத்[தி] [ல்*] பள்ளிகொண்டபெருமாள் பாடிவேட்டை திருனாள் கிரிபிறதசுஷணம் எழுந்தருளுகையில் . . . . . . கட்டளைபடி [பி*]றாம்மண . . . . . . வற்களா . . . .
9. . . . . . . தருமம் ஸ்ரீபண்டாரத்திலே கண்டுகொண்டு யிந்த பொலியூட்டு கட்டளைபடி சந்திராதித்தவரையும் நடத்த கடைவோமாகவும் யிந்த பொலியூட்டுக்கும் தருமத்துக்கும் அகிதம் பண்ணின பேபே(பே)ர் கெங்கை கரையிலே காராம்பசுவை
10. கொன்ற தோஷத்திலே போகக் கடவராகவும் ஃ

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 886/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 15-ஆம் நூற்.
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 235-A of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/258
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டு எண்	: 10

அரசு : விஜயநகரர்

அரசன் : -

இடம் : ஸ்ரீரங்கநாதசாமி கோயில். கருவறை வடக்கு ஜகதி.

குறிப்புரை : மெய்க்கீர்த்தி தொடக்கம்.

Summary : Vijayanagara 15th century C.E. Begining of Eulogy.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||*] ஸ்ரீமந் மஹாமண்டலெசுவர ராசாதிராச ராசபரமேசுர கண்ட . . . .
2. மோகாந்தவித்தான் பாஷைக்கு தப்புவராயர்கண்டன் மூவராயர் கண் . . . .

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 887/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	:
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 15-ஆம் நூற்.
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 233 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/255
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11
அரசு	: விஜயநகரர் (?)		
அரசன்	: -		

இடம் : ஸ்ரீரங்கநாதசாமி கோயில். வராகர் சன்னதி. கருவறை மேற்குக் குமுதம்.

குறிப்புரை : கோயிலுக்கு வாணவராயக்கோன், சம்புவராயகோன் மகன், நாளிட்டு வென்றான் ஆகியோரைத் திருவிளக்குக்குடியாக ஐம்பொன்னூற்றுப் பற்று நாட்டவரும் துவராபதி வேளானும் நியமித்தனர்.

Summary : No king name. 15th century C.E. the nāḍu assembly of *Poṉṉūṟṟu paṟṟu* conferred the *thiruviḷakkukuḍi* upon three individuals.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||*] கீலக வருஷம் ஆடி [மீ]ல் பெருமான் பன்றிஆழ்வா[ர்*]க்கு திருவிளக்கும் அ[வ]யத்துணை ஆன வாணராயக்கோனை பொண்ணூற் பற்று நாட்டார் திருவிள-
2. க்கு[கு*]டியாக விட்டோம் சந்திற(ா)தித்தவரையும் செல்ல[வு]ம் இராக்கித வருஷ முதலாக திருவிளக்[கு*] குடிய[ா*]க சம்பு[வ*]ராய[க்*]கோன் மகன் மாணிக்கனையும்
3. வாணராயகோன் உள்ளிட்டாரை(ரை)யும் நாளிட்டு வென்றாங்கோனையு[ம்*] சந்திராதித்தவரையும் செல்ல திருவிளக்குக்குடி ஆக விட்-
4. டோம் பொ[ன்]னூர் பற்று நாட்டவரும் துவராபதி வேளானும் இப்படிக்கு [இ*]து வண்டுவராபதி சமையகணக்கன் எழுத்து
5. இவை துவராபதி வேளான் எழுத்து இந்த குடிக்கு அஹிதம் சொன்னவன் ஸ்ரெஸ்ரொஹி[||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 888/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 30
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1298
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 231 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/253
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 12
அரசு	: பாண்டியர்		
அரசன்	: மாறவர்மன் குலசேகரன்		

இடம் : ஸ்ரீரங்கநாதசாமி கோயில். வராகர் சன்னதி. கருவறைத் தெற்கு குமுதம்.

குறிப்புரை : அரசன் நலம் பெற செஞ்சி மலைப்பற்றில் சிங்கபுரத்தில் அகரப்பற்று, பல கோயில் தேவதானங்களை விட்டு மீதமுள்ள ஊர் நில வருவாயினை இக்கோயிலுக்கு நாட்டவர் அளித்துள்ளனர்.

Summary : Pāṇḍiya, Kulasēkara r.y. 20 1298 C.E. It records the gift of taxes excluding other *brahmadēya* and *dēvadāṉa* by *nāḍu* assembly.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி[ஸ்ரீ] [||*] ஸ்ரீகோ கிஜூடியும் திருவாய்க்கேழ்வியு முன்னாகக் கோமாறபன்மர் திரிபுவனச் சக்கரவத்தி[க]ள் [ஸ்ரீ]குலசேகர[தே]வற்கு யா-
2. ண்டு ௩௰ ஆவது ஸிஂஹ நாயற்றுப் பூர்வ (ப)க்ஷத்து ஏகாதஶியும் பெற்ற மூலத்து நாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் பல்கு-
3. ன்றக் கோட்டத்துச் சிங்கபுரநாட்டுச் சிங்கபுரத்துத் திருப்பன்றிகுன்றில் நாயனார் பன்றி ஆழ்வார்க்குச் செஞ்சிமலைப் பற்றில் நாட்டவரோம்
4. பெருமாள் திருமேனி குன்றாதத்* திருவாராயனத்துக்கும் அமுதுபடி சாத்துப்படிக்கும் திருநாள் எழுந்தருளவும் மற்றுமுள்ள கோ[யி]ற் தேவைகளுக்கு-
5. [ம்] திருப்பணிக்கும் உடலாக இச்சிங்கபுர முதலடங்க இறையிலியாகத் திருவிடையாட்ட முன்னாள் இவ்வூர் அகரப்பற்றுப் பலதளி தேவதா-
6. நம் நீங்கலாக இவ்வூரும் நாட்டேரியும் நாற்பாற்கெல்லைக்குட்பட்ட நஞ்சை நிலமும் புன்சை நிலமு[ம்*] புறவடை மாவடை மரவடை கு-

* நன்றாக - என்றிருத்தல் வேண்டும்

7. ளவடை அசுவதிபேர்க்[க]டமை காசாயவற்க[ம்*] குடிபேர்க்[க]டமையு மற்றும் இவ்வெல்லையுட்பட்ட ஸஃஸ்ஹ வ்யாவ்ஹிகளு[ம்*] மு[ன்*]னாள் பழந்திருவி-

8. டையாட்டம் இவ்வெல்லையுள்பட்ட இருஷிகளும் ஏந்தலான திருவிடையாட்ட நிலங்கள் முதலடங்க இறையிலியாகச் ஊநூஜிதூவ-

9. ரை நடக்கத் திருநாமத்துக்காணியாக இப்படிக்குக் கல்லிலுஞ் செம்பும் வெட்டி இவ்வூர்கள் திருவிடையாட்டமாக விட்டோம் இந்நாட்டவரோம்

10. தாயனூர்க் கோமுழான் எழுத்து மங்கலங்கிழான் எழுத்து மலையனூர் [ம]ாடமுடையான் எழுத்து க[ா]ங்கயப் பேரரையன் எழுத்து அங்கராய . . . . .த்து வல்லவராயன் எழுத்து சம்புவரா[ய*]ப் பேரரையன் எழுத்து பள்ளிக்கட்டுப் பேரரையன் [எழுத்து]. . . . .

11. . . . . கைமதவாரண இரா[ஜ*]ரா[ஜ*] வ்யூஹாரா[ய]ன் எழுத்து பள்ளிக்கட்டு வேளான் எழுத்து உ

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 889/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1378
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 232 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/254
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 13
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: மல்லிகார்ஜுனன்		

இடம் : ஸ்ரீரங்கநாதசாமி கோயில் வராகர் சன்னதி அர்த்தமண்டபம் பட்டி, குமுதம், ஜகதி.

குறிப்புரை : திருவேங்கடமுடையானுடன் வேறு சிலரையும் திருவிளக்குக்குடியாக இக்கோயிலுக்கு நியமித்தான். இவர்கள் ஆண்டுக்கு மூன்று பணம் இக்கோயிலுக்கு அளிக்கவேண்டும் என்று கட்டளையிட்டான்.

Summary : Vijayanagara Pratapa mahadēvarāya 1378 C.E. It records the conferment of *Tiruviḷakkukuḍi* upon two individual. They must remitted three *paṇams* to this temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||*] ஸ்ரீமன் மஹாமண்டலீசுரன் அரியரா[ய]விபாடன் பாஷெக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் இராஜாதிராஜ இராயபரமேசுரன் ஸ்ரீவீரப்பிறதாப கெசவேட்டை கண்டரு[ளி]ய தேவராய மகாராய குமாரர் மல்லிகாற்[சுன] தேவமக[ா]ராய பிறுது[விய்] ரா-
2. (யிரா)ச்சயம் பண்ணியருளாநின்ற சகாத்தம் சூ௲௩௱௭௰அ ல் மேல் செல்லாநின்ற தாது வருஷத்து மகரநாயற்று அ[ப]ரபக்[கி ஷத்து] துவிதிகையும் புதவாரமும் பெற்ற மகத்து நாள் பல்குன்றக் கோட்டத்து சிங்கபுர வளநாட்டு செஞ்சிப்பற்று சிங்கபுரம் பெருமாள் பன்றி ஆழ்வார் சிறீபண்டாரத்து
3. க்கு படைவீட்டுராஜ்யம் சாதமணதம் நடத்தும் [தி]ருவேங்க[ட]முடையான் சூரப்ப வேளான் தன்மசாதனம் குடுத்தபடி மணவாளகோன்
4. திருவேங்கிடமுடையான் வென்று மாலை இட்ட பெருமாள் திம்மணன் உள்ளி[ட்*]டாரை திருவிளக்கு குடி ஆக விடுகையில் இம்முதுகுடி
5. வருஷம் ஒன்றுக்கு திருவிளக்குக்கு இறுக்கும் ௰ ௩ பணமூன்றும் இறுத்து சந்திராதித்தவரையும் இவ்வெம்பெருமானுக்கு

6. திருவிளக்குக்கு இறுக்க கடவர்கள் ஆகவும் இந்த தன்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் உண்டானால்
7. கெங்கைக்கரையிலே கோவதை குருவதை பிறும்ம வதை செய்தவன் போன பாவத்திலே போகக்கடவர்கள்
8. இவை சூரப்ப வேளான் எழுத்து இப்படிக்கு இவை விழுப்பாதராயன் எழுத்து[||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 890/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1445
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 230 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/252
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 14

அரசு : விஜயநகரர்

அரசன் : பிரதாப தேவராய மகாராயன்

இடம் : ஸ்ரீரங்கநாதசாமி கோயில் வராகர் சன்னதி அர்த்தமண்டபம் சிழக்குச் சுவர்.

குறிப்புரை : கோயிலுக்குத் திருவிளக்குக்குடியாக செஞ்சி பற்றின் பாணன் என்பவன் நியமிக்கப் பெற்றான்.

Summary : Vijayanagara Vīrapratāpa 1445 C.E. It records the conferment of post tiruviḷakkukuḍi upon Pāṇaṉ from Giñgee paṟṟu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||ஸ்ரீ*] ஊகூ இராஜாதிராஜ ரா[ஜ](ா) பரமேஸ்வ[ர]
2. வஜாபதெவராய மஹா[ா*]ர[ா*]யர் வூயிவி -
3. ரா[ஜ]ஜூ பண்ணி அருளா[ா*] நின்ற (காதி) கு-
4. [ெ]ரா(தி)யி வ(ா)ருஷ ஆடி ம[ாத]ம் உயம் ௯
5. (ம்) சிங்கபுரம் பெருமா[ள்*] ப[ன்*]றி [ஆ]ழ்வாற்கு திருவிள[க்கு கு*]டி
6. [ஆ]க விட செ[ஞ்*]சி பற்று பாணன் சந்ராதித்ய -
7. வரை கோ[யி]லுக்கு செல்லக்கடவத[ா*]க-
8. வும் பொலு பொ[யி]ண்டன் எழுத்து
9. இப்[ப*][டி]க்கு முக்கணன் எழுத்து இ[ப்*]படி -
10. க்கு இவை முத்து மரு[தன்*] எழுத்து [||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 891/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	:
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1432
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 229 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/251
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டுஎண்	: 15
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: இரண்டாம் பிரதாப தேவராயன்		
இடம்	: ஸ்ரீரங்கநாதசாமி கோயில். அர்த்தமண்டபம் கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : கோயிலுக்குத் திருவிளக்குக்குடியாக வேங்கடம் என்பவன் நியமிக்கப் பெற்றான்.

Summary : Person by name Vēṅgaḍam appointed as *tiruvīḷakkukuḍi.*

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||*] ஸ்ரீமந் இராஜாயிராஜ ரா-
2. ஜபரமேஸ்வ[ர*] வூரதாப தெவரா-
3. ய மஹாராயர் ப்ருதிவி[வி]ராஜ்யம் ப-
4. ண்ணி அருளாநின்ற காலத்தில் பரிய[ா]
5. வி வருஷம் ஆவணி மீ யிஉ ஓ சோம-
6. [ஞ] ஹண புண்யகால[த்திலே*] சிங்கபுரம்
7. பெருமாள் பன்றி ஆழ்வாற்கு
8. திருவிளக்கு குடி ஆக விட்ட [செ]சஞ்-
9. சி பற்று மலையக்கோன்
10. வேங்கடம் சந்த்ராதித்தவரை கோயி[லு]-
11. க்கே செல்லக்கடவதாகவு[ம்*] வழிதிகோன் [||*]

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர்எண் : 892/2023**

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	:	-
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	:	16

அரசு : -

அரசன் : -

இடம் : குடமலை குமாரத்தம்மன் கோயில் அருகில்.

குறிப்புரை : கல்வெட்டு முழுமையாக இல்லை. பலி காடு என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது.

Summary : Fragmentery. No king. The particular word Paḷi kādu may be mention as Cemetry.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. . . . ட்டி இத்தே-
3. வர் நீடு வாழ்
4. . . . பலி காடு
5. . . . . . .

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 893/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 14-ஆம் நூற்.
ஊர்	: சிங்கவரம்	இ.க. ஆண்டறிக்கை	: 237 of 1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ. XVII/260
எழுத்து	: தமிழ், கிரந்தம்	ஊர்க் கல்வெட்டு எண்	: 17
அரசு	: -		
அரசன்	: நீலகங்கரையன்		
இடம்	: குடமலை குமாரத்தம்மன் கோயில் அருகில்.		

குறிப்புரை : அதிகாரி ஒருவன் ஸ்ரீகரணப் பெருஞ்சேரி என்றொரு குடியிருப்பை உருவாக்கி அச்சேரியில் குடிகளைக் குடியேற்றி அவர்கள் அளிக்கும் வரிகளை இக்கோயிலில் விளக்கெரிக்க, நெய் அளக்க ஆணையிட்ட செய்தி வேண்டினான்.

Summary : Nīlakaṅkaraiyan̲, 14th century C.E. It records the request of an officer for settling the people in the *Srikaraṇaperuñcēri* and receiving some taxes for the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[||*] [நீ]லகங்கரைய னண்-
2. ணாவனாட்டடிகளுக்கு இவர-
3. திகாரி கேசவனம்பி விண்ண-
4. ப்பத்தினால் திருப்பன்றி-
5. குன்றில் ஆள்வாற்கு திருவமுது[க்]கு-
6. ம் திருவிளக்குக்கும் ஸ்ரீகரணப்பெருஞ்-
7. சேரியென்று குடியேற்றி இச்சேரி யிருக்[கு]
8. ங் குடிகள் [செ*]சயுங் குடிமையா[வ]து . . . . . .
9. டி மனை [ய]ரைக்காலும் சிறுகுடி மஞ்சாடியும் திங்-
10. கட்சோறும் [புதா]ப்பு நெயு மட்டி இருப்ப[தா]கவும் இ-
11. ச்சேரி இ[ரு]ந்த குடிகளே யித்தேவதானம் . . . . . . ழ்பாலுறுவ-
12. தாகவும் இத்தன்மம் இறக்[கி]னார் ஏழாநரகத்து கீ
13. ழால் நரகம் புகுவார் இயநூ-
14. ஃ ஈக்ஷிப்பார் ஸ்ரீபாததூளி என்றலை மேலன
15. இது ஸவ௳வாஙிஹாஈஃ[||*]

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 894/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 15-ஆம் நூற்.
ஊர்	: நல்லாண்பிள்ளை பெற்றாள்		
		இ.க. ஆண்டறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசு	: விஜயநகரர் ?		
அரசன்	: அச்சுதராயர்		
இடம்	: ஊர் எல்லையில் உள்ள பலகைக் கல்.		

குறிப்புரை : நல்லாண்பிள்ளை பெற்றாள் ஊர் எல்லையில் உள்ள மலையடிவாரத்தில் இரு துண்டுகளாக உடைந்து கிடக்கும் பலகைக் கல்.

Summary : On the broken slab in the foot hill. It records the gift of land donation.

கல்வெட்டு :

1. சோழ வளநாட்டுப் பெண்ணை
2. னார் நீலகிரி பறுபதம் சூழ்ந்த பல்க்
3. கோட்டத்தில் புறத்தப்பற்றில் புர . . .
4. . . . ற்கு தெற்கு நீலகிரி பறுவதத்துக்கு
5. . . கு சிங்க மூலைக்கு வடக்கு நல்-
6. லாண் பிள்ளை பெற்றாளுக்கு கி-
7. க்கு ஆன சாளுவ புத்தேரி னாய
8. . . . லம் உடையவர் பழமலை-
9. நயினார்குச் சந்திராதித்த வரையு-
10. ம் மகர பூசை நடத்த
11. அச்சுத்த தேவ மாராயற்கு புண்-
12. ணியம்மாகக் குடுத்தோம் இந்தப் பூ
13. மி ஆளுகிற பண்ணி ஆற்றுமான கர
14. சந்திராதித்தவரையும் நடத்தக் க-

15. டவார்கள்ளாகவும் இந்தப் புண்ணி-
16. யத்துக்கு இயாதொருவர் அகுத-
17. ம் பண்ணின்னா கெங்கைக் கரை-
18. யிலே காராம் பசுவைக் கொன்ற
19. பாவத்திலே போகக் கடவாராக-
20. காசியிலே பிறுமாத்தி தோஷ-
21. ம் பண்ணின பாவத்திலே போ-
22. கக் கடவராகவும்

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 895/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: சகம் 1454
வட்டம்	: செஞ்சி	வரலாற்று ஆண்டு	: 16-ஆம் நூற்.
ஊர்	: நல்லாண்பிள்ளை பெற்றாள்		
		இ.க. ஆண்டறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசு	: விஜயநகரர்		
அரசன்	: அச்சுத்தேவராயன்		
இடம்	: ஊர் எல்லையில் உள்ள பலகைக் கல்.		

குறிப்புரை : நல்லாண்பிள்ளை பெற்றாள் ஊர் எல்லையில் உள்ள மலையடிவாரத்தில் இரு துண்டுகளாக உடைந்து கிடக்கும் பலகைக் கல்.

Summary : On the broken slab in the foot hill. Achutha dēvarāyan̲ 1532 C.E. It records the gift of Pākkam by Chandhira Nayinār and his relatives.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மன் சாலிவா –
2. கன சகாத்தப ரூசா -
3. ருயிசல் மேல் செல் –
4. லாநின்ற நந்தன
5. வருஷம் புரட்டாதி மீ
6. யிரு ௨ சுக்கில பட் –
7. ஷத்தில் திருவோணமும்
8. செவ்வாய்க்கிழமையும் பெ-
9. ற்ற ஏகாதெசி புண்ணிய கால –
10. த்தில் ஸ்ரீமன் மகாமண்டலீ –
11. சுர மேதினி மீசுர கண்ட கட்டாரி
12. சாளுவ அரியராய விபாடன் பா –
13. ஷைக்கு தப்புவ ராயர கண்டன்
14. இராசாதிராசன் ராசபரமேசுரன்

15. . . . . பண்ணி அச்சுத
16. [தேவ]ராயர் விசனகரம் சி[ன]
17. கரதன் . . . . ல் எழுந்தருளி இரு –
18. ந்து பிறுதிவி இராச்சியம் பண்ணி
19. அருளா நிற்கையில் அவற்குப் [புண்] -
20. ணியம்மாகப் படைவீடு துற்காபதி
21. ஆன சந்திர நயினார்கும் அவர்
22. உடன் பிறந்த சிந்னா நயினார்கும் சிங்-
23. கமுலை பற்றில் பழவலம் உ-
24. டையவர் பழமலை நயினாற்கு
25. பூசை நமக்காரங்களுக்கும் அ-
26. ங்கரங்க வைய்போகத்துக்கு -
27. ம் மகர பூசை நடக்கத்[தக்க]தாகக்
28. . . . . ந[ா]யக்கத்தனம் தரகசுகரமி-
29. மாக பாலித்து அருளின வய-
30. வாக நல்லூர் சீமைக்கு சே –
31. ந்து வருகிற செயங்கொ[ண்ட]
32. சோழ வள நாட்டுப் பெண்ணைக –
33. ரை நீலகிரி பறுபதம் சூழ்ந்த பல்[குன்]-
34. ற கோட்டத்தில் பாக்கப் பற்றில் பாக். . .
35. கு தெற்கு நீலகிரி பறுவதத்துக்கு . . . .
36. ற்கு சிங்கமுலைக்கு வடக்கு நல் –
37. [லா]ண்பிள்ளைப் பெற்றாளுக்கு கி-
38. ழக்கு ஆன சாளுவப் புத்தேரியை
39. . . . . . லம் உடையவர் பழமலை
40. நயினாற்கு சந்திராதித்தவரையு-
41. ம் மகர பூசை நடத்தத் தக்க[த]ாக
42. அச்சுந்த தேவ மாராயர். . .
43. ணியம்மாக குடுத்தோம் இந்தப்ப[டி]
44. சந்திறாதித்தவரையும் நடத்தக் க-

45. டவர்களாகவும் இந்தப் புண்ணி-
46. யத்துக்கு இயாதொருவர் அகுத-
47. ம் பண்ணினா கெங்கைக் கரை -
48. யிலே காரம் பசுவைக் கொன்ற
49. பாவத்திலே போகக் கடவராகவு -
குறிப்புரை : முன்னூரைச் சேர்ந்த யஜ்ஞமூர்த்தி பட்டன் என்பவன் எழுதி கொடுத்த நிலவிலை ஆவணம் பற்றிய கல்வெட்டு. மூலத்தானமுடையார் கோயிலுள்ள சில பிராமணர்களில் பாரதுவாஜி மற்றும் அவனைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நிலத்தை எட்டு காசுக்கு விற்றுக் கொடுத்து விளக்கு எரிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளான். இந்நிலம் அபிமானமேரு வாய்க்காலிலிருந்து பிரிந்து சென்ற இரண்டாம் கண்ணாற்றுப் பாசனத்து பதினோராவது சதுரத்தில் இருந்த நிலமாகும். ஒரு கண்ணாறு பதினோரு சதுரம் வரை பாசன நீரைக் கொண்டு செல்கிறது எனில் அக்காலத்திய நீர்ப்பாசன அமைப்புகள் நமக்கு வியப்பு தருகின்றனவாக உள்ளன.

Summary : On a north mupattai kumuda of the mahamandapa in the Ādalīśwara temple. Chōḻa- Kulōttuṅga-II- 11th regnal year- 1144 C.E. The inscription registers on the land valuation document written by a man named Yajñāmūrthy Bhaṭṭan from Munnūr states that he sold a certain piece of land for eight paise and asked to light a lamp.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்-
2. டு ௰௧ ஆவது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஓய்மா நாடான விஜெய-
3. ராஜேந்திர வளநாட்டு முஞ்ஞூரான ராஜநாராயண சதுர்வே-
4. தி மங்கலத்து ஆளுங்கணத்தாரிள் பாசிண்டிபுறத்துய் யஜ்ஞ மூர்த்திபட்ட-
5. ந் எதிர்விலையாவணம் இவ்வூர் சிவப்ராஹ்மணன் பாரத்வாஜி கூத்தர் உள்ளி-
6. பட்டந் உள்ளிட்டார்க்கு நாந் விற்றுக் குடுத்த நிலமாவது திரிபுவன -
7. மாதேவிவதிக்குக் கிழக்கு அபிமானந் மேரு வாய்க்காலுக்கு தெற்கு இர-
8. ண்டாங் கண்ணாற்று பதினொன்றாஞ் சதிரத்து தெற்கடைய நிலம்

9. நாலுமாவில் மேற்கடைய நிலம் ஒருமா முக்காணி இதின் கி -
10. ழக்கு நிலம் முக்காணி இதில் தெற்கடைய நான் இருங்கண்டி-
11. யார் விணடாந் பக்கல் கொண்டுடைய நிலம் காணி அரைக்காணியும் இக்கூத்தாடிப் பட்டநுக்கு-
12. பொருள் அந்றாடு நற்காசு அ இக்காசு எட்டும் ஆவணக்களியெ கழனகச் செவவிற் கொண்டு விற்று விலை ஆவணந் செய்து குடுத்தெந் இக்கூத்தாடிப் பட்டாநுக்கு பசிண-
13. டிப்புறத்து யஜ்ஞ மூர்த்தி பட்டநெந் இந்நிலங் கூத்தாடி பட்டநெந் (கொளகைக்கு காரிணம்) இவூர் ஸ்ரீமூலஸ்தானமுடைய வற்கு திருநுந்தா விளக்குக் கடவமந் இ-
14. க்கொந் மகந் திருவாய்க்குலக்கொந் கடவ விளக்கு அரை இவிளக்கு அரையும் இம்மன்றாடி திருவாய்க்குலக்கொந் பக்கல் நாந் அறக்கைக் கொண்டு இது

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1039/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 18
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 70/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் இராசராசன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகாமண்டபம் வடக்குமுப்பட்டை குமுதத்தில் கீழ் ஜகதி.

குறிப்புரை : திருமூலத்தானமுடையார் கோயிலுக்கு இவ்வூர் மன்றாடி ஆராதான் பந்நிருவன் ராஜேந்திர சோழகோன் உள்ளிட்டார் திருநந்தா விளக்கு ஒன்று கொடுத்து அவற்றை எரிப்பதற்காக நிலமும், பதினாறு பசுவும் கொடுத்துள்ளனர். இவ்விளக்கு அரையும் நிலங்கொண்டு விட்ட விளக்கு அரையும்சந்திராதித்தவரைஎரிக்கவேண்டும்என்றுகூறிக்கொடுத்துள்ளனர்.

Summary : On a north muppattai kumuda of the mahamandapa in the same temple-Chōḻa- Rājarāja-II- 18th regnal year. 1171 C.E. Land and sixteen cows given to the temple to light a lamp.

கல்வெட்டு :

1. திருவாய்கேழ்வி முன்னூர்த் திருபுவன சக்கரவர்த் -
2. திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு ௰அ ஆவது ஜயங்கொண்ட சோழம-
3. ண்டலத்து ஒய்மாநாடாந விஜயராஜேந்த்ர வளநாட்டு முஞ்னூரான ராஜ
4. ஜ நாராயணச் சதுர்வேதிமங்கலத்து உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார் ம-
5. ஹா தேவற்கு இந்நாட்டு இவ்வூரிலிருக்கும் மந்றாடி ஆராதாந்பந்நிருவநா
6. ந ராஜேந்த்ர சோழக் கோநுள்ளிட்டார் இ[த்]தேவர்க்கு திருநந்தா விளக்கு ஒ[ன்]ந்று
7. இதில் சொக்கர் பெருமாளுக்குப் பதிநொன்றாவது இக்கோயிலில் சிவ
8. பிராமணந் கூத்தாடிப்பட்டநுள்ளிட்டார் [வ]சங்கொண்டு நிலங் கொண்டு
9. விட்ட விளக்கு அரையும் இப்பொது இவந் பொற் சீராமநாத
10. இராஜேந்திர சோழகோநுள்ளிட்டார் விட்ட பசு பதிநாறிநால் திருநந்-
11. தா விளக்கு அரையும் நிலங்கொண்டு விட்ட விளக்கு அரையும் ஆக
12. திருநந்தா விளக்கு ஒ[ன்]றும் சத்திராத்திவரை செலுத்தக்கடவோம்.
13. ஹாரஹாஜி கூத்தாடிப்பட்டநுள்ளிட்டார் சிவலோகமுடையாநும் ரக்ஷணா-
14. மு[ர்]த்தியும் இவ்வனைவோம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1040/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	**ஆட்சி ஆண்டு**	: 30
வட்டம்	: திண்டிவனம்	**வரலாற்று ஆண்டு**	: பொ.ஆ. 1216
ஊர்	: முன்னூர்	**இ.க. ஆண்டறிக்கை**	: 50/1919
மொழி	: தமிழ்	**முன் பதிப்பு**	: -
எழுத்து	: தமிழ்	**ஊர்க் கல்வெட்டு எண்**	: 7
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: ஆடவல்லீசுவரர் கோயில் அர்த்த மண்டப விருந்த குமுதம்.		

குறிப்புரை : வர்த்தராயன் என்பவன் அரசனை அணுகி முன்னூர் ஆடவல்ல நாயனார் கோயிலில் மன்னன் பெயரால் திருபுவனவீரன் ஆவணித் திருநாள் விழா கொண்டாடவேண்டும் என்றும் அதற்காக ஓய்மாநாட்டு துண்டஞ்துூர் கூற்றத்து வன்னியநல்லூரில் நன்செய் 50 வேலியும் நத்தம் கொல்லை நிலங்களில் சரிபாதியும் தேவதானமாகத் தந்து வரியில்லாமல் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். அதற்கிணங்க அரசன் தனது சில வருவாய்த் துறை அதிகாரியான வரியிலார்க்கும் வரிப் பொத்தகமுடையார்க்கும் ஆணைப் பிறப்பித்தான்.இந்த ஆணையை அரசனுடைய ஆணை அதிகாரி திருமந்திரவோலை என்பவன் எழுதினான். இந்த ஆணை கோயிலைச் சேர்ந்த சீகாரியம் செய்யவார், மற்றும் மாகேஸ்வர கண்காணி மற்றும் தேவகன்மய கோயில் கணக்கர் ஆகியோர்க்கும் அனுப்பப்பட்டது. இக்கல்வெட்டில் ஆணை திருமுகம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

Summary : On a verudha kumudha of the maṇḍapa in the same temple. Chōḻa-Kulōttuṅga-III. 30th regnal year. 1216 C.E. A man named Vartharayan approached the king and requested that the Thiruphuvanaveeran Āvani Thirunal festival be celebrated in the name of the king at the Munnur Aadavalla Nayanar temple, and accordingly, the king issued an order to his revenue officials.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீதிரிபுவன வீரதேவர்க்கு யாண்டு ௩௰ ஆவது உா ரு௰ ௳ எழுதின திருமுகப்படி திரிபுவன சக்கரவர்த்தி
2. கோனேரிமெல் கொண்டான் ஐயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாடான விசையராஜேஜு வளநாட்டு முஞ்ஞூரான இராஜநாராயணச் சதுர்வெ௳தி மங்கலத்து ஆடவல்-

3. ல நாயனார் கோயிற் சீகாரியஞ் செய்வானுக்கும் சீமாஹேசுரக் காண்காணி செய்வார்களுக்கும் தேவகன்மி கோயிற் கணக்கனும் இன்னாயனாற்கு திரிபுவன வீரன் தி-

4. ரு ஆவணித் திருநாள் எழுந்தருளவும் திருப்பணிக்கும் இம்மண்டலத்து ஓய்மாநாட்டு துண்டத்தூர்களில் வன்னியநல்லூரில் நஞ்சை நிலத்து மேற்கடைய ஐம்ப-

5. திற் வேலி தறை [இறையிலி] பெறுவதாக வேணுமென்று வத்தராயன் நமக்கு சொல்லி வரக்காட்டினான் இவ்வூரில் நஞ்சை நிலத்து மேற்கடைய ஐம்பதிற்று

6. வேலியும் ஊர் நத்தத்து செம்பாதியும் கொல்லை நிலத்து செம்பாதி இன்னால் முதல் இன்னாயனாற்கு தேவதானமாக கைக்கொண்டு ஆவணித் திருநாளும் எழுந்தருளுவித்து திருப்பணிகளுஞ் செய்யப் பண்ணுவதாக வாரியிலார்க்கும் வரிப்பொத்தக முடையார்க்களுக்குஞ் சொன்னோம் தாங்களும் இன்னாள் முதல் இப்படி செய்யப் பண்ணுக எழுதினான் திருமந்திரவோலை எழு[த்]தும்

7. இராசநாராயண மூவேந்த வேளானும் வில்லவராயனும் வா . . . . . ட மானும் அல்கராயனும் சித்தாரய-

8. னும் காடவராயனும் சிங்களராயனும் இகை ராயனா . . . . . ப்படி இப்பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1041/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 11
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 71/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7-II
அரசு	: சம்புவராயர்		
அரசன்	: இராஜநாராயணன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகாமண்டப வடக்குச் சுவரில் உள்ள குமுதம்.

குறிப்புரை : செங்கேணி அம்மையப்பன் சீயன் ராஜநாராயண சம்புவராயன் என்பவன் ஆடவல்லநாயனார் கோயிலில் எதிரிகணராயன் என்ற பெயரில் ஒரு திருமாளிகை எடுத்துள்ளான். அந்த மாளிகை (திருச்சுற்று மாளிகை) கட்டும் செலவுகளுக்காகவும் பிற கட்டுமான செலவுக்காகவும் பராமரிப்பு செலவுக்காகத் தட்டழிப்பாட்டம், வனகஞ்ச காசு, சீகாரிய பேறு, கோயில் தமபேறு, குற்ற தண்டம், கார்த்திகை காசு, முன்குடிக் காசு, வேலிப்பயறு, நல்லெருது, நற்பசு, வெட்டி, அரிமுக்கை, நாவிசை குடி, வண்ணான், தட்டான் போன்ற வரிகளை ஒதுக்கிக் கொடுத்துள்ளான்.

Summary : On a north wall of the kumuda of the mahamandapa in the same temple. Ṣambuvarāya-Rajanārāyaṇan̲. 11th regnal year. 1204 C.E. A monk named Śeṅgēni Ammayappan̲, Seeyan Rajanārāyaṇan̲ Sambuvarāyan, has taken a temple Inner Courtyard in the name of Ediriganārāyan in the Adavallanayanar temple. He has set aside many taxes for the construction costs of the temple Inner Courtyard, other construction costs, and its maintenance costs.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டு ௰க ஆவது ஐயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மாநாடான விசையராஜேந்திர வளநாட்டு முஞ்ஞூரான இராஜநாராயணச் சதுர்வேதிமங்கலத்து உடையார் ஆடவல்லனாயநார்க்கு செங்கேணி அம்மை அப்பந் சீயந் பல்லவாண்டானாந ராஜநாராயண சம்புவராயநேந் இக்கோயிலில் எதிரிகநாயந் திருமாளிகைக்கும் மற்றும் திருப்பணிக்கும் நாந்விட்ட ஆயம் தட்டழிப்பாட்டமுங் குடிக்காசும் வனகஞ்ச காசும் சீகாரியப்பேறும் கோயிற்றமப் பேறும் குற்றதெண்டமும் கார்த்திகை காசும்
2. முன்குடிக்காசும் வேலிப்பயறும் நல்லெருதும் பசுவும் வெட்டி அரிமுக்கையும் நாவிதக் குடியும் வண்ணாறும் தாட்டாறும் மற்றும் இக்கோயிலில் காசாயங் விட்டேந் செங்கேணி பல்லவநாத சம்புவராயநே இத்தன்மத்துக்கு விரோதம் பண்ணுவார்கள் கங்கை இடை குமரி இடை செய்தார் பாவங் கொள்வாஞ் பன்மாஹேஸ்வரசைஷ

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1042/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: சகம் 1386
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1464
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 51/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 8-1 & 8-2
அரசு	: -		
அரசன்	: -		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் கருவறை கிழக்கு விருத்தக் குமுதம்.

குறிப்புரை : அம்பிவீரனின் மகனான தட்சிண கபிலேஸ்வர குமார புத்திரன் என்ற கஜபதி மன்னர் காலத்தில் இக்கல்வெட்டு சக வருடம் 1386-இல் (கி.பி. 1464) இல் வெட்டப்பட்டது. தொடக்கத்தில் கொண்ட வீடு, கொண்டப்பள்ளி, படைவீடு, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, சந்திரகிரி முதலிய பகுதிகளை இந்த கஜபதி மன்னன் தன் ஆட்சியின்கீழ் வென்று இருந்ததாகக் குறிப்பிடுகின்றான். இவன் அகம்வீரபோகம், திருவிழா, திருப்பணி ஆகிய செலவுகளுக்காக சில பங்குகளாகப் பிரித்துக்கொடுத்துள்ளான்.

Summary : On a east viruta kumuda of the central shrine in the same temple. Gajapathy. 1464 C.E. This inscription was carved in the year 1386 (1464 AD) during the reign of the Gajapati king Dakśhina Kapilēśvara Kumāraputra, son of Ambivīra, dēva divided a certain piece of land into five shares for the expenses of the Agamvīra bhōgam festival and renovations and used the income generated from them to carry out the festival and renovations.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மல்லிநாத தேவகண்டு கரபிநரது சரணசணரக்ஷ தெண்ட புருதர பலக்ஷ கொட தண்ட பண்டார பரிக்ஷ பூறுவ கொண்ட வீடு கண்டபரட -
2. பரிக்ஷ வகஉண்டபாடு கொண்டவீடு கொண்டபள்ளி அத்தங்கி வினுகூதரணடை தெண்ட பாடு பரக்ஷவக தெண்ட பாடு வீடு வழுதிலம்பட்டு திருவாரூர் திருச்சி-
3. ராப்பள்ளி சந்திரகிரி பரிக்ஷ ஸ்ரீஅம்பிதேவர் குமாரர் உக்ஷண கபிலேசுரன் குமாரர் மஹா பர்த்திர்ய பிறிதிவி இராச்சியம் பண்ணி அருளா நின்ற ஸகாத்தம் ருநா அ௰சு ௩ தின-
4. மேல் செல்லா நின்ற தாருண வருஷத்து மிதுந னாற்று பூறுவ பக்ஷத்து திருதியையும் விசாழகிழமையும் பெற்ற பூசத்து நாள் செயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாடான வீரரா-

5. செந்திர சோழ வளநாட்டு முஞ்ஞூறு ஸ்ரீஇராசநாராயண சதுறுவேதி மங்கலத்து பூறுவத்தில் தேவதாநம் குடு[த்த] திருவிடையாட்டம் நீங்கலாக சிறப்பு மஹா சனத்தின் காணி ஆன யாறு மட்டும்
6. குடிநீங்காத் தேவதாநம் திருவிடையாட்டமாக உடையார் ஸ்ரீமூலத்தான முடைய மகாதேவற்கு நாலு பங்கும் பெருமாள் புருஷொத்தமற்கு ஒருபங்கும் ஆக சறுமானிய இறை-
7. யிலியாக அகம்வீர பொகத்துக்கும் திருநாள் திருப்பணிக்கும் குடுத்தளவுக்கு சந்திறாதித்தவரையும் நடக்க கடவதாகவும் இந்த தன்மத்துக்கு யாதொருவர் அகிதம் பண்ணினவர்கள் கெங்கை-
6. கரையில் காராம் பசுவையும் வேதப்பிராமணரையும் கொன்ற பாவத்திலே போகக் கடவர்களாகவும்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர்எண் : 1043/2023**

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 10
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 52/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராசராசன்		
இடம்	: ஆடவல்லீசுவரர் கோயில் கருவறையின் கிழக்குப் பட்டி.		

குறிப்புரை : சிற்றரசர்களாய் இருந்த அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் இராஜநாராயண சம்புவராயன் முன்னூரில் தனது பெயரில் ராஜநாராயண சதுர்வேதி மங்கலம் என்று அந்தணர் (பிராமணர்) கொடை சாராமை மாற்றினான். அவன் அந்தச் சபையாரிடம் முஞ்ஞூரின் கீழ் பகுதி சிற்றூரான விழுவூரில் ஒரு குறிப்பிட்ட கொல்லை நிலம் விலைக்குப் பெற்று அதை வேட்டைப்புறமாக தந்து இருக்கிறான். இந்த நிலத்தில் இரண்டு மாநிலத்தின் வரிவருவாயைக் கொண்டு சித்திரை மாதத்தில் ஆடவல்லநாயனார் திருவேட்டை திருநாள் எழுந்தருளும் போது இறைவனது திருக்காப்பு, நாண் கட்டும் பூசை இவற்றின் செலவுக்காகவும் மற்றும் சிறு செலவுக்காகவும் மூலதானமாகக் கொடுத்து இருக்கிறான்.

Summary : On a east patti of the central shrine in the same temple. Chōḻa-Rājarāja-III. 10th regnal year. 1226 C.E. During the Ammaiyappaṉ Sīyaṉ Pallavandan, Rajanārāyaṇaṉ Sambuvarāyaṉ, who was chieftain under the Rājarāja Chōḻa III, built a temple in his own name, Rajanārāyaṇa chaturvēdimaṅgalam, in Munnūr.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாகத் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசராஜதேவற்கு யாண்டு ய்வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாடான விசையராசேந்திர வளநாட்டு முஞ்ஞூரான இராஜநாராயணச் சதுர்வேதிமங்கலத்து உடையார் ஆடவல்லநாயனாற்கு அம்மையப்பன் சீயன் பல்லவாண்டனான இராஜநாராயணச் சம்புவராயனென் முஞ்ஞூ[ற்று]த் தி -
2. ருவேட்டைப் புறமாக விட்ட கொல்லை நிலத்தில் மா இலை குழி ஆயிரமும் நீர் நிலத்தில் கொண்டு விட்ட நிலம் இரண்டு மாவும் சித்திரைத் திருநாள் திருவேட்டை எழுந்தருளி அருளவும் இவற்றை நாளுக்குத் திருக்காப்பு நாணுக்குங் குறைவுறுப்புக்கும் உடலாக இந்நிலத்து கடமையும் அனைத்தாயங்களும் உட்பட இறையிலியாக விட்டேன் அம்மையப்பன் சீயன் பல்லவாண்டனான இராஜநாராயண சம்புவராயனேன் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1044/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 32
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1208-17
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 86/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9-II
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் நுழைவாயில் இடப்பக்கம் (சக்தி விநாயகர்) உள்ளது.

குறிப்புரை : முன்னூர் ஆடவல்லநாயனார் கோயிற் திருப்பணிக்காகவும், அமுதுபடிக்காகவும் ஒரு குறிப்பிட்ட நிலத்தைக் கொடுத்துள்ளான். இக்கல்வெட்டு சிதைந்துள்ளது.

Summary : On a left entrance in the same temple. Chōḻa- Kulōttuṅga-III. 32th regnal year. 1218 C.E. A specific land has been provided for the renovation of the MunnurAadavallanayanar temple and Thiruvamudhu..

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள்.... தேவற்கு யாண்டு முப்பத்திரண்டாவது நாள் ஙாருமெ ஸ்ரீதிரிபுவன சக்கரவர்த்திகள்
2. ஓய்மாநாடான செயங்கொண்ட சோழ மண்டலத்து முஞ்னூரான இராஜநாராயண சதுர்பேதி
3. மங்கலத்து நாயனார் கோயிற் தேவகன்மிக்கும் .ர.மாஇக்காசுஞ் கொண்டு சுய...ரிகளுக்கும் கயிமயம்
4. -ர- அனுதாரம்..யல் வஞ்நிற்பட்ட ..யமு..
5. யமுது தி..ண்டாவது யாரணரான முதல்...வனுக்கு...நிற்காசுடவும்

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1045/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: சகம் 1388
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1466
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 53/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 10-1 & 10-2
அரசு	: விஜயநகரர் - சாளுவ		
அரசன்	: நரசிங்கராய உடையார்		
இடம்	: ஆடவல்லீசுவரர் கோயில் கருவறையில் வடக்கு விருத்தக குமுதம்.		

குறிப்புரை : விஜயநகர மன்னர் நரசிங்கராய உடையார் சக வருடம் 1388- கி.பி.1466 விய வருடம் மார்கழி 9, முன்னூர் ஆடவல்லநாயனார் கோயிலுக்குச் சித்திரை திருநாள் விழாவுக்காகவும், பூந்தோட்டம், பூசைகளுக்காகவும் ஒரு குறிப்பிட்ட நிலம் வழங்கியுள்ளான். இவனுடைய தம்மரசர், அன்னமரசர், அவத[ா]ரம் அவர்களின் அதிகாரிகளாக ஆட்சியில் விளங்கினார்கள்.

Summary : On a north viruta kumuda of the central shrine in the same temple. King Gajapathy. 1466 C.E. Muññur Ādavallanāyanār has given a certain land to the temple for the Chithirai festival, flower garden and pujas. It is evident from the inscription that his Dhammarasar, the agent of Annamarasar, Avadaram who was the officials in the government.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விசையநரபுரத்து சக வருஷம் ௲௩௱அ௰அ ல் மேல் செல்லா நின்ற விய வருசம் மார்கழி பூசருஸ்ரீமண்ணம்மண்... நாமேதனி மீசர கண்ட கடாரி சாளுவ சாளுவ நரசிங்கர உடையார் அவதாரம் அன்னமரசர் காரியத்துக்கு கடவார் தம்மரசர் முஞ்னூறு]டைய நாயினார்க்கு தன்ம சாதனம் அன்னமரசர் தன[ா]ம்மாக நாள்தோறும் உதைய காலம் சாயங்காலம் நெய் பதக்கு அமுதுபடி கான நானாழியும் பண்ணி யார் நானாழியும்

2. மண்டபத்திலே எழுந்தருள உபையத்துக்கம் சித்திரைத் திருநாள் உபையத்துக்குமாக செய்துக் குடுத்த படைவீட்டு ராச்சியத்து ஓய்மாநாட்டு முஞ்னூரான ராசநாராயண சதுறுவேதி மங்கலத்தில் திறப்பில் பெரியேரி நீர்பாச்சலில் செரட்டுக்காலுக்கு திருநாமத்துக்காணிபந்தமாக கட்டளைக்கு . . . தென்கழனி திருப்படிக்கு உக்கல் கண்ணிக்காலுக்கு வடக்கு வ . . . காலுக்கு மேற்கு இருபத்து நால் . . . .

3. குழி வத ரூா இன்னாயினாற்கு பூசத்திருநாளுக்கும் சித்திரைத் திருநாளுக்கு எழுந்தருளுவித்து . . . . . மழ நாயக்காமன் தன பெருமாள் நாயக்கர் வையிபித்த

திருநந்தாவானம் மேற்படியார் வெட்டு விச்சதத்துக்கு இக்கு. விதக்கு கரை நாட்டுக்கு இச்சிற்றேறி கழனி மருசுக்கும் வடக்கு . . . . . ணயான் ருடலமும் விட்டு மண்டபமும் கட்டுவித்து சிலாத்தபனமும் பண்ணுவித்துக் குடுத்து இந்த நஞ்சை... வத ரூா ம் திருநந்தவானமும் மடை விளாகம் பல சாதி . . ங்க வரியும் பெடக் . காடத் சமுகாரக்கு

4. புண்ணியக் காலத்திலே . . . ண்ண பொத்த தானத்தார் பூறுவதமாக குத்தளவுக்கு இந்த . . . . . . பாஷாணம் அடசிணி ஆகாமிசதத்சாத்தி என்கிற வுடலாக சான்மியம் உ சந்திறாதித்தவரை அங்கரங்க போகமும் நடத்தியுனு பஷத்து கொள்ளக் கடவதாகவும் இந்த தன்ம சாதனத்துக்கு அகிதம் பண்ணிவாரு கெங்கைக் கரையில் காரம் பசுவை கொன்ற பாவத்திலே போகக்கடவர்களாகவும்

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1046/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 10
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 54/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11
அரசு	: பாண்டியர்		
அரசன்	: வீரபாண்டியன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் கருவறையின் வடக்குப் பகுதியில் உள்ள விருத்த குமுதம்.

குறிப்புரை : நாட்டார்கள் ஆடவல்லநாயனார் கோயிலைச் சேர்ந்த மாகேஸ்வர கண்காணி, தேவகண்மிகள், கணக்கர் ஆகியோரிடம் விழுவூர் என்ற ஊரை ஆடவல்ல கூத்தநல்லூர் என்ற இறைவன் பெயராக மாற்றி நாட்டை இறையிலி நிலமாகக் கொடுத்துள்ளனர். இந்த நல்லூரில் நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட நஞ்செய் நிலம், புஞ்செய் நிலம் வரிவருவாய் முழுவதும் இக்கோயிலில் மாசித் திருநாள் விழா கொண்டாடுவதற்காகவும், தினமும் பூசைகள் நடத்துவதற்காகவும், கோயில் பராமரிப்புப் பணிகள் (திருப்பணி) செய்வதற்காகவும் பயன்படுத்த வகை செய்யப்பட்டது. நன்செய் நிலம் இரண்டு மாவும் புன்செய் நிலம் ஒரு மாவும் ஏதோ நிவந்தங்களுக்காகக் கொடுக்கப்பட்டது. இந்த ஆடவல்லகூத்தநல்லூரிலிருந்து பெறப்படும் செக்கிறை, தட்டார் பாட்டம், செக்குக்கடமை முதலிய வரிகள் சொல்லப் படுகின்றன. இக்கல்வெட்டின் மூலம் விழுவூர் என்ற ஊர் ஆடவல்லக்கூத்தநல்லூர் என்று பெயர் மாற்றம் பெற்று 'ஆடவல்லகூத்தான்' என்ற பெயரில் இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

Summary : On a north side of the virutha kumudha in the same temple. Saḍaiyavarman Veerapāṇḍyan. 10th regnal year. In the people of Munnur gave the land to the MageswaraKankani, Devakanmigal, and Kankiyakar of the Aadavallanayanar temple, changing the name of the town called Villuvur to the name of the Lord Aadavallakootthanallur and giving it to the Lord as a sacred land.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடயன் பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு ய ஆவது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மானாடான விஜயராஜேந்திர வளநாட்டு முஞ்ஞூறான இராசநாராயணச் சதுவேதிமங்கலத்து உடையார் ஆடவல்லநாயனார் கோயில் ஸ்ரீமாகேஸ்வரக் கண்காணி செய்வார்க்களுக்கும்

2. தேவகன்மி கோயிற் கணக்கனுக்கும் இந்நாட்டு நாட்டவரோம் இந்நாயனார்க்குத் திருமாசித் திருநாளுக்கும் பூசைக்கும் திருப்பணிக்கும் நாட்டிறையிலியாக விட்ட இந்நாட்டுத் தனியூர் விழுவூர் ஆந ஆடவல்ல கூத்த நல்லூர் என்று பேராகவும் இவ்வூர் நாற்பாற்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்-
3. செய் புறவடை ஏரிவாய் புறவடை உள்ளிட்ட நிலத்தில் இக்கோயில் கேட்கும் திருமேனிக்கு மடப்புற இறையிலியாக விட்ட நன்செய் நிலம் இரண்டு மாவும் புன்செய் நிலம் ஒருமாவும் நீக்கி நீக்கி நின்ற நிலமும் இவ்வூரில் செட்டிறை தறிஇறை தட்டார்ப்பாட்டம் ஏரிமீன் பாட்டம் செக்குக்கட-
4. மை உலாவிப் பரிமாறுவார் இருந்து பரிமாறுவார் உள்ளிட்டு மற்றும் எப்பேர்ப்பட்ட காசாயவற்கங்களும் உட்பட இந்நாயனார்க்கு முதலடங்க இறையிலியாகச் சந்திராதித்தவரை செல்வதாகக் கொடுத்தோம் இந்நாட்டு நாட்டவரோம் இப்படிக்குப் பணியால் நாட்டுக் கணக்கு அறம் இறங்கா நாட்டு வேளான் எழுத்து

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர்எண் : 1047/2023**

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 15
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1231
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 74/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 12
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: ஆடவல்லீசுவரர் கோயில் மகா மண்டப மேற்கு சுவர்.		

குறிப்புரை : விஸ்வேஸ்வர தேவர்க்கு விளக்கு ஒன்று தானமாகக்கொடுத்து ஒருகுறிப்பிட்ட நிலத்தை வழங்கி நிலத்தின் மூலம் வரும் வருவாயைக் கொண்டு, விளக்கு எரிப்பதாகவும் மேலும் உழுகையப்பட்டன் அன்றாடு நற்காசு கொடுத்து அமுது படைக்கவும் அம்பலக்குடி பட்டன், மயங்கிபுரத்து பட்டன் உள்ளிட்டோர் ஒரு குறிப்பிட்ட நிலமும் கொடுத்துள்ளனர்.

Summary : On a west wall of the maha maṇḍapa in the same temple. Chōḻa-Kulōttuṅga-III. 15th regnal year. 1231 C.E. All the income received from the lands Devadhanam donated by Thirumoolathanamudaiyar is used to decorate the temple, build a Nandavanam and wear clothes for the Lord.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்க்கு யாண்டு பதினைஞ்சாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து....
2. ㎡ தேவற்க்கு ஆரியன் கமலாகர ஸட்டனேன் கொண்டு விட்ட நிலமாவன இவ்வூற்த் திருஸுவன ஊஹாதேவிவதிக்குக் கிழக்கு சுஹிமானமேரு வாய்கால் கண்ணாற்று முதல் சதிரத்து சொக்கன்பட்ட நிலம் நாலுமாவில் ஆலங்காலுக்கு தெற்க்குள்ள நிலத்தில்... கீழ்க்கடைய நிலம் அரைக்காணி நீக்கி இ-
3. தன் மேற்கு கவுண்ணி உழுதைய பட்டன் பக்கல் அன்றா[டு] இறைக்காசு பதிபனைஞ்சிட்டு அமுதுபடிக்குக் கொண்டு விட்ட நிலம் அரைமாவும் இவ்வதிக்கு கிழக்கு முதற்சதிரத்து வடக்கடைய நிலம் நாலுமாவில் மேற்கடைய மொருமா நீக்கி இதன் கிழக்கு நிலமொருமாவில் தெற்கடைய நிலம் காணி நீக்கி இதன் வடக்கு
4. மேற்கடை அம்பலத்துப்பட்டன் பக்கலும் வங்கிப்புறத்துத் திருவனந்திசபட்ட உள்ளிட்டார் பக்கலுங் காசு இருபத்தேழுக்கு இட்டு அமுதுபடிக்கு கொ[ண்]

டு விட்ட நில அரை மாவுக்கு. குண்டூர் ஸ்ரீரங்கநாத பட்டன் பக்கல் காசு பதின்மூன்றிட்டு கொண்ட நிலங்காணியும் இன்னிலங்காணியும் இக்கோயிலில் சிவஸ்ராஹூண (ஜிகர) ஈச்வராய கூத்தாடி பட்டனும்மற்

5. றும் இக்கோயிலில்க் காணியாளராயுள்ள சிவஸ்ராமணரும் நித்தம் இரண்டு சந்தி விளக்கு சந்ராதித்தவரை விஸ்வரதேவற்கு செலுத்தகடவர்களாக இவர்கள்... ஆண்டான் கமலாகரபட்டன் இது வநாஷேஸ்வர ரகை்ஷ

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1048/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 72/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 13
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் இராஜராஜன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகாமண்டப முப்பட்டைக் குமுதத்தில் மேற்குப் பகுதியில் உள்ளது.

குறிப்புரை : ஸ்ரீமூலத்தானமுடையார் கோயிலில் ஆரியன் ஆண்டான் கமலாகரப்பட்டன் என்பவன் விஸ்வவேஸ்வரதேவர் என்ற தெய்வத்தை மேற்கு திருச்சுற்று மாளிகையில் பிரதிஷ்டை செய்துள்ளான். இத்தெய்வத்துக்கு என்றென்றும் ஒரு சந்தி விளக்கு எரிவதற்காக அன்று புழக்கத்தில் இருந்த நல்ல காசுகள் ஒன்பதினைக் கொடுத்துள்ளான். இந்த ஒன்பது காசினையும் இக்கோயில் சிவபிராமணர்கள் பெற்றுக் கொண்டு என்றென்றும் ஒரு சந்தி விளக்கு எரிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

Summary : On a west muppattai kumuda of the mahamandapa in the same temple-Chōḻa- Rājarāja-II- 14th regnal year. 1167 C.E. A man named Aryan Andan Kamalakarapattan donated nine paisas to this temple to light a lamp for the deity Visveswaradeva, whom he had established.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் செயமாதும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க அருமறை விதிநெறி அனைத்தும் தழைப்ப வருமுறை யுரிமை மணிமுடி சூடித் திங்கள் வெண்குடைத் திசைக் களிறெட்டுந் தங்கு தனிக்கூடந்தானென விளங்கக் கருங்கலி படிமிசைச் செங்கோல் துறப்பப் சதிராழி புவிவளர்த்துடந் வில்லவர் இரட்டர் மீனவர் சிங்களர் பல்லவரங் தலியா பாற்திவர் பணிய என்றுங் . . ப மண்ணகம் புணர்-
2. த்து புவனமுழுவதுடையாளோடும் விற்றிருந்தருளிய கோப்பரகேசரி பற்மரான திரிபுவ[ன]ச் சக்கர்வர்த்திகள் ஸ்ரீஇராஜராஜதேவற்கு யாண்டு ௰௪ ஆவது ஸிம்ஹநாயற்று அபரபக்ஷத்து ஏகாதஸியும் திங்கள் கிழமையும் பெற்ற திருவாதிரை நாள் ஜயங்கொண்ட சோழ
3. மண்டலத்து விஜயராஜேந்திர வளநாடடு முஞ்னூரான ராஜநாராயணச் சதுர்வேதி மங்கலத்து ஆளுடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயிலில்

காணி உடைய சிவஸ்ராஹ்மணரோம் இக்கோயிலில் மேலைத் திருச்சுற்றில் ஆரியந் ஆண்டாந் கமலாகரபட்டன் ப்ருதி

4. ஷத்தி விஸ்வவேஸ்வர ஷேவற்கு ஸந்தி விளக்கு [உ]பையம் இக்கமலாகரப் பட்டன் பக்கல் நாங்கள் கைக்கொண்ட அந்றாடு நற்காசு ஒன்பது இக்காசு ஒன்பதும் இவந் பக்கல் கைகொண்டு சந்திராதித்தவரை இவ்விஸ்வசேஸ்வர ஷேவற்கு ஒரு சந்தி விளக்கு-

5. ச்செலுத்த கடவோமாநோம் இக்கோயிலில் காணியாளராய்யுள்ள சிவஸ்ராஹ்மணரோம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1049/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1160
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 76/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 14,15
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் இராஜராஜன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகாமண்டப மேற்கு முப்பட்டை குமுதத்தில் உள்ளது.

குறிப்புரை : திருமுனைப்பாடி நாட்டு இராஜசிங்கபுரத்தைச் சேர்ந்த கடவுழான் தேவன் உடையான் என்ற வாணிகனால் அன்றாடு நற்காசு வழங்கப் பெற்று மூலத்தானமுடையார் கோயில் காணியாளராயுள்ள (பூசை உரிமை) சிவபிராமணர் ஒரு சந்தி விளக்கு எரிக்க ஒப்புக் கொண்டு உள்ளனர்.

Summary : On a west muppattai kumuda of the mahamandapa in the Ādalīśwara temple-Chōḻa- Rājarāja-II- 7th regnal year. 1160 C.E. A merchant named Kadavuzhan Devan Udayan from Rajasinghapuram in the Thirumunaipady district offered a coin to the Shiva Brahmin of the Moolathanamudaiyar temple to light a lamp every day.It is known that the lamp was lit on the day of Karthigai, on the day of Karthigai, in the month of Karthigai.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாது ஜெயமாதும் நாமருவிய கலைமாதும் ஜெயமாதும் நயந்து புல்க அருமறை விதிநெறி அனைத்தும் தழைப்ப வருமுறை
2. யுரிமை மணிமுடி சூடித் திங்கள் வெண்குடித் திசைக்களுறெட்டுந் தங்கு தனிக் கூடந் தானென விளங்கக் கருங்கலிப் பட்டிகை செங்கோல் துரப்ப பொரு கதிராழி புவிவளர்த்துடன் வர வில்லவர் ரெட்டர் மீனவர் சிங்களர் பல்லவாந் தலியர் பார்திவர் மணிய எண்ணருங் கற்பக மண்ணகம் புணந்து செம்பொன் வீரசிங்
3. ஹாஸத்து புவனமுழுதுடையாள்ளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பந்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு ௰௪ வது ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஓய்மானாடான விஜெய *ராஜேந்த்ர* வளநாட்டு முஞ்ஞூறான *ராஜநாராயண* ௪௲வெ௱ழி ௨௦ஹலத்து உடையார்

ஸ்ரீமூலஸ்தாந முடையார் கோயிலில்க் காணியாளராயுள்ள *சிவப்பிராமணரோம்*
சந்தி விளக்கு *உபயம் ராஜராஜ*

4. வளநாட்டுத் திருமுனைப்பாடி நாட்டு *ராஜஸிம்ஹ*புரத்து வாணிகன் கடவுழான் தேவன் உடையான் பக்கல் கைக்கொண்ட அன்றாடு நற்காசு ஒன்பதும் கைகொண்டு இவ்வாண்டைக் கார்த்திகை *மாஸ*த்துக் காத்திகை நாள் முதல் இத்*தே*வர் கோயிலில் *சந்தி* விளக்கு ஒன்று எரிக்க *ஸ்வீகரி*த்தவற் *உபயா*கக் கைக்கொண்டோம் இக்கோயிலில் காணியாளராயுள்ள *சிவபிராமணரோம்*. இது *பந்மாஹேஸ்வர ரக்ஷை*

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1050/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 11
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1145-46
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 75/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 16
அரசு	: சோழர்		
அரசன்	: இரண்டாம் குலோத்துங்கன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் -மேற்கு முப்பட்டை குமுதத்தின் கீழ் ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : நகர் என்று அழைக்கப் பெற்ற தீனசிந்தாமணி சதுர்வேதி மங்கலத்தில் ஒரு குறிப்பிட்ட நன் செய் நிலம் (ஒன்பதே முக்காலே) மற்றும் புன்செய் நிலம் தரப்பட்டு அதற்குரிய வரியாக ஆயிரம் கலம் நெல் நிர்ணயிக்கப்பட்டு தேவதான இறையிலியாக தரப்பட்டது. இந்தத் தேவதான இறையிலியைக் கொண்டு குலோத்துங்கச் சோழன் பன்னிரண்டு யாண்டு முதல் கோயிலுக்கு வேண்டிய நிவந்த செலவுகள் செய்யப்பட்டன. தேவதானமாகத் தரப்பட்ட தீனசிந்தாமணி என்ற பெயர் மாற்றப்பட்டு குலோத்துங்கச் சோழ நல்லூர் என்ற பெயரில் வழங்கப்பட்டது.இந்த ஆணையின் வரி விலக்கும் விசலூர் கிழவன் தில்லைநாயன் வேண்டுதலால்('விண்ணப்பம்') அரசனிடமிருந்து பெறப்பட்டது. இந்த ஆணை நிலவரிப்புத்தகமான 'வரி'யில் பதியப்பட்டு வரியிலார், வரிக்கூறு செய்வார் என்ற நிலவருவாய் துறை அதிகாரிகளால் 'உள்வரி' என்று சான்று ஆவணம் தரப்பட்டது. அரசனின் நேர்முக ஆணை 'அசஞ்சால மூவேந்தவேளாண்' என்ற திருமந்திரவோலைஅதிகாரியால் எழுதி தரப்பட்டது.

Summary : On a west muppattai kumuda in the down jagadi in the Ādalīśwara temple. Chōḻa- Kulōttuṅga-II. 11th regnal year- 1145-56 C.E. It was a direct order issued by King. This order was sent to the MageswaraKankanichaidan and Dēvakaṇmigal, the guardians of the Sri Mūlasthānamuḍaiyār Temple. A specific piece of land was given to Dinachintāmani ChaturvēdiMaṅgalam, which was called Nagar, and a tax of one thousand kalams of paddy was fixed for it, and it was given as a gift to the gods

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூமேவு வளர்திருப் பொன்மார்புப் புணர நாமேவு கலைமகள் நலம்பொரிது சிறப்ப விசைய மாமகள் வெல்புயத் திருப்ப விசையுஞ் செல்வியு மெண்டிசை விளங்க நிருபர்வந் திறைஞ்ச நீணில மடந்தையைந் திருமணம் புணர்ந்து சிரவளர் கவித்தென

2. அணிமுடி சூடி மல்லை ஞாலத்துப் பல்லூயிற்க் கெல்லாம் மல்லையிலின் மயலிடினிலெய்த வெண்குடை நிழற் செங்கோலோச்சி வாழிபல்லூழி ஆழி நடப்ப செம்பொன் வீரஸிംஹாஸனத்துப் புவன முழுதுடை யாலோடும் வீற்றிருந்தருளிய கோவிராச கேசரி பற்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ

3. குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு பந்நொண்றாவது திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டாந் ஜெயங்கொண்டசோழ மண்டலத்து ஓய்மா னாடான விஜயராஜேஞ்சிர வளநாட்டு முஞ்னூறான ராஜநாராயணச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீமூலஸ்தான முடையார் தேவக[ன்]மிக்

4. கும் ஸ்ரீ உகேஶ்வரக் கங்காணி செய்வார்களுக்கும் இத்தேவர்க்கு வேண்டு நிமந்தங்களுக்கு இருப்பதாக இந்நாட்டு நகராந தீனசிந்தாமணி நல்லூரில் ஒரு பக்கமடைய நீர்நிலம் பத்தொன்பதேய் முக்காலேய் ஒரு மா வரைக்காணி முந்திரிகைக் கீழரையே இரண்டுமா முக்காணியும் புந்சை நிலம் நாற்பதரையே ஒரு மா முக்காணிக் கீழ் மும்மா வரை . . . . . யாண்டு

5. யும் ஆகப் புந்சையுட்ட நில அறுபத்தேழு மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே மாகாணியி நால்வரிசை படி நெல் ஆயிரக் கலமும் யாண்டு பந்நிரண் டாவது முதல் தேவதா-

6. ன இறையிலியாக இட்டு பழம்பேர் தவிர்த்துக் குலோத்துங்க சோழநல்லூர் எந்னும் பேரால் வரியிலிட்டு வரியிலாரும் வரிக்கூறு செய்வார்களும் எழுதிட்ட உள்வரிதரச் சொன்னோம். இன்நிலம் பன்-

7. னிரண்டாவது முதல் தேவதான இறையிலியாகக் கைக்கொண்ட இத்தேவர்க்கு வேண்டு நிவந்தம் செலுத்துக எழுதிநான் திருமந்திரவோலை அசஞ்சல மூவேந்த வேளாந் இவை மலை அப்பராயன் எழுத்து

8. யாண்டு யவளரரஙய விசலூர் கிழவந் தில்லை நாயகன் கொண்டபுலி ஆண்டார் விண்ணப்பத்தால் இது பெரியமார் ஆழ்வார் தந்மம்.

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1051/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 73/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 17-1,17-3

அரசு : -

அரசன் : -

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகா மண்டப வடமேற்குப் பட்டி.

குறிப்புரை : அரசனுடைய ஆணையை குறிப்பிடும் இக்கல்வெட்டு சீயன் பல்லவாண்டான் எதிரிலிசோழ சம்புவராயனுக்கு அனுப்பப்பட்டது. இவ்வாணையில் கங்கையராயனும், நுளம்பராயனும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சிறுபாடி என்று அழைக்கப்பட்ட குலோத்துங்க சோழநல்லூர் முன்னூர் ஆடவல்லானுக்குத் தேவதானமாக வரி நீக்கி தரப்பட்டது. இந்த ஆணை (பிரசாதம், திருமுகம்) மீனவன் மூவேந்த வேளாண் என்ற திருமந்திரவோலை அதிகாரியால் எழுதப்பட்டு இருக்கிறது.

Summary : On a northwest patti of the mahamandapa in the same temple. This is a royal decree inscription. The name of the king is not found. The royal decree was sent to SeeyanPallavandan, who was the chief of the Chola army.This inscription is a good example of how a government decree is issued and implemented.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சிறுபாடியான குலோத்துங்க சோழநல்லூர் தேவதானமிட்ட படிக்கு சீயந் பல்லவாண்டான் எதிரிலி சோழ சம்புவராயனுக்கு எழுதின திருமுகபடி செயங் கொண்டசோழமண்டலத்து ஓய்மானாடான விசையராசேந்திர வளநாட்டு சிறுபாடியில் உள்ளூர்த் தேவர்களுக்கு தேவதானமான நிலநீக்கி நின்ற நில இன்னாட்டு முஞ்னூரான இராஜநாராயணச் சருப்பேதி மங்கலத்து ஆடவல்லார்க்கு தேவதான இறையிலியாக இக்கோயிலிலி-
2. டப் பெறவேணுமென்று தான் சொல்லி வரக்காட்டினாகக் காங்கையராயனும் நுளம்பாயிராயனும் நமக்கு சொன்னவாறே சிறுபாடியில் உள்ளூர்த் தேவர்களுக்கு தேவதானஇறையிலியான நிலநீக்கி நின்றநில முஞ்னூறான ராசநாராயணச் சருப்பேதி மங்கலத்து ஆடவல்ல[ா]ர்க்கு ஐஞ்சாவது திருமூலத்தானமுடைய தேவதான இறையிலியாக இட இ[வ்]வரியிலாகும் வரிக்கு கூறுசெய்வார்களும் எழுத்திட்ட உள்வரி பொதக்காட்-

3. டி சொன்னோ[ம்] இப்படி செய்ய பண்ணுக எழுதினை திருமந்திரஓலை மீனவ[ன்] மூவேந்த வேளான் நுளம்பாதிராயரும் காங்கையராயரும் வில்லவராயரும் வேசாலிபாடிராயரும் வயிராகராயரு[ம்] விசையராம நந்தியாரரும் எழுத்திட்டு பிரசாதஞ் செய்தருளின திருமுகப்படியே இவ்வூரும் உள்ளூருமுட்ப்பட்ட கழந்தேவதானங்களும் விட்டு அண்ணா கல்வெட்டுப்படி உட்பட்ட காசு கடமைகளும் சந்திராதித்தவரை வி . . . . . பல்லவாண்டாநான எதிரிலிசோழச் சம்புவராயநேன் இயமம் விரோதம் பண்ணுவார் கங்கை இடை குமரிஇடை செ(ய்)த பாவம் கொள்வார்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர்எண் : 1052/2023**

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 18
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1204
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 55/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 18-1, 18-2

அரசு : சோழர்

அரசன் : மூன்றாம் இராஜராஜன்

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகாமண்டப முன்பு தெற்கு பட்டி.

குறிப்புரை : முன்னூர் மூலத்தானமுடையார் இறைவனுக்கு நடுவில் நாட்டில் சில சிந்தாமணி என்ற இடத்தில் தங்கியிருந்தா (நிலையுடையார். பரிகிரகத்து) பெண்களில் தேவராண்டாள், தவம் செய்தாள் மற்றும் அவனது இரண்டு மகள்களும் மற்றும் தையாமுலி என்ற பெண் உட்பட மூன்று பெண்கள் மூன்று சந்தி விளக்குகள் கொடுத்துள்ளனர். இந்த விளக்குகளைக்கோயிலின் முன் தீர்த்த குடமும் மஞ்சன குடமும் தர்ப்பை புல்லும் எடுத்து சென்று வழிபாடு நடத்துகின்ற கருவறை குழுவினர் (உண்ணாழி சபையார்கள்) எரிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

Summary : On a south patti of the mahamandapa in the same temple - Chōḻa-Rājarāja-III- 18th regnal year. 1204 C.E. This inscription mentions that spertual-lamp donated by three ladies.

கல்வெட்டு :

1. திரி[புவ]நச் சக்கரவ[ர்]த்திகள் ஸ்ரீஇ-
2. ராஜ[ரா]ஜ தேவர்க்கு இயாண்டு ப-
3. திந்நெட்டாவது ம்அ ஜெயங்கொண்-
4. ண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாடா-
5. ன விஜயராஜேந்திர சோழவளநாட்டு முஞ் -
6. ஞூராந ராஜநாராயண சதுர்வேதி ம-
7. ங்கலத்து உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடை-
8. யார்க்கு நடுவில் நாட்டுச் சிலசிந்தாமணிப்பாரி -
9. க்கிரகத்தில் நிலையுடைய பெண்டுகளில் தேவரா -
10. ண்டாள் தவஞ்செய்தாளெந் வைத்த சந்தி விளக்கு
11. ஒந்றும் . . . தையா மூலி வைத்த சந்தி

12. விளக்கு மாக மகள் மலி... செம்முவல்லிர் வைத்த சந்-
13. தி விளக்கு ஒன்றும் ஆக சந்தி விளக்கு மூந்றும் இக்கோ -
14. யிலில் குடமுங் குச்சியுங் கொண்டு புகக் கடவார் இவ்விளக்கு மூன்-
15. றும் சந்திராதித்த வரை எரிக்கக் கடவோம்மாநோம் இக்கோயி-
16. யிலில் திருவுண்ணாழிகை ஸபையோம் இது பநூாஹேஶ்வர
17. ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1053/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1229
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 57/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 19
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகா மண்டபத்தின் முன் தென்மேற்குப் பட்டி.

குறிப்புரை : திருமூலத்தானமுடையார் தேவதான நிலங்களிலிருந்து பெறப்படும் காவல் வரியான (பாடிகாவல்) ஒரு மாவுக்கு ஒரு பதக்கு நெல்லும் கண்காணி தறிக்கார வரியும் தச்சர், கொல்லர், வண்ணான் (ஈரம் கொல்லி) குயவர் ஆகியோர் மூலம் கிடைக்கும் மகற்மையும் வாணியர் மீது விதிக்கும் வரியும் செக்கு மீது கிடைக்கும் வரியும் ஆக இவை அனைத்து வருவாய்களையும் கோயிலுக்குப் பூச்சுக்கு வழங்கவும் நந்தவனம் அமைக்கவும் இறைவனுக்கு அணிவிக்கும் ஆடைகளும் மற்றும் (பரிவட்டம்) இறைவன் மீது பூசப்படும் நறுமணப் பொருள்கள் வாங்கவும் பயன்படுத்தப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இத்தன்மத்துக்கு விரோதம் செய்வார் இறுதியில் ஓம்படைகிளவியாக செய்யப்பட்ட பாவங்கள் அனைத்தும் பெறுவர் என்று சொல்லப்படுகிறது.

Summary : Gift of certain taxes for a flower-garden and other requirements to the god by Śeṅgēṇi Ammayappaṉ Rājarāja Sambuvarāyaṉ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ தி[ரி]புவநச்சக்கரவர்த்திகள் ஸ்ரீரா-
2. ஜராஜ ஷேவற்கு யாண்டு பதிந்மூந்றாவது
3. ஜயங்கொண்ட சோழமண்டமலத்து ஓ-
4. ய்மா நாடாந விஜயராஜேஜ்ரு வளநாட்டு முஞ்ஞூ-
5. ரான ராஜநாராயண சதுர்வேதிமங்கலத்து உடையார்
6. ஸ்ரீமூலஸ்தானமுடையார் தேவதாநங்களில் பாடிகாவ-
7. லும் மாப்பதக்கும் கங்காணியும் திருமடைவிளாகத்தி-
8. ல் தறி இறையும் தச்சர் கொல்லர் மகழ்மையும் ஈ-
9. ரங் கொள்ளி குசவர் இவூரில் இருக்கும் மகழ்மையும்

10. வாணியர் பேர் வரியும் கடைப்பாட்டமும் செக்குகட
11. மையும் இத்தேவர்க்கு திருநந்தவ[ன]த்துக்கும் திருமேல்
12. பூச்சுக்கும்திருப்பரிசட்டத்துக்கும் திருவிளக்கெண்ணைக்கும்
13. ஆக விட்டேன் செங்கேணி அம்மையப்பந் ராஜராஜச் சம்பு-
14. வராயநேந் இத்தந்மத்துக்கு விரோதம் பண்ணுவார் ம–
15. ங்கை இடை குமரி இடை செய்தார் செய்த பாபங்கொ -
16. ள்வார் இது பந்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1054/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 56/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 20-1,20-2

அரசு : சோழர்

அரசன் : மூன்றாம் இராஜராஜன்

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகா மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : முடிகொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த தம்மையன்... எண்ணாயிரம் என்ற வாணிகன் அவ்வூர் அந்தணர் சிலரிடமிருந்து ஏழு கழஞ்சு பொன் விலைக்கு (இரு) நூறு குழிநிலம் விலைக்கு வாங்கியுள்ளான். இந்த நிலத்தைக் கொண்டு இந்த ஊர் அம்பலத்திலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும்படியாக ஒரு வீதி அமைத்துள்ளான். இந்த வீதி வாணியர் தெரு என்று பெயர் இடப்பட்டது. வாணியர் என்பார் எண்ணெய் ஆட்டுபவர்கள். கோயிலுக்காக எண்ணெய்யாட்டுபவர்களின் குடியிருப்புக்காகத் தெரு அமைக்கப்பட்ட செய்தியும் அந்த எண்ணெய் யாட்டுபவர்களின் பெரும்பங்கு பணி கோயில் பயன்பாட்டுக்காக எண்ணெய்யாட்டுவதாக இருந்திருக்க வேண்டும் என்பதுதெரிறிது.

Summary : On a south wall of the maha maṇḍapa in the same temple. Chōḻa-Rājarāja-III. 13th regnal year.A merchant named Dhammaiyan Ennaiyaram from Cholapuram has purchased (two) hundred plots of land from some of the Brahmins of that village for seven gold coins. He has used this land to build a road leading from Ambalam to the west.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு பதின்மூன்றாவது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாடாந
2. விசைய ராஜேந்திர வளநாட்டு முஞ்ஞூரான ராஜநாராயண சதுர்வேதி மங்கலத்து உடையார் ஸ்ரீமூலஸ்தான முடையார்க்கு தக்கோலமான வடமு-
3. டி கொண்ட சோழபுரத்து வாணியன்னாகத் தம்மையன் . . . மாநா னாற்பத் தெண்ணாயிரன்மாயியேன் ராஜ நாராயண சதுர்வேதி மங்
4. கலத்து ஒழுக்கந் திறந்து கொண்டய பட்டனும் இக்குடி ஸ்ரீகிருஷ்ண பட்டனும் . . . . . . குடி சீராம பட்டனும் உள்ளிட்டார் பக்கல் நான் விலை கொண்டு இத்தேவற்க்கு வி

5. ட்ட மனையாவது இவ்வூர் அம்பலத்தினிறும் மேற்க்கு னோக்கி
6. பசிண்டிய (னை) ஜதமூர்த்தி பட்டன் மனைக்கு மேற்கு கீழ்மேல் மபைப்பேரா-
7. லால் நிலமே கோல் பதினாறுக்கு தென்வடக்கு பதினாற் -
8. குழி இருநூற்று இருபத்துனாலுக்கும் விலையாக ஏழு கழஞ் பொன் கொ
9. இத் தேவற்க்கு வாணியத் தெருவாக விட்டேன் னாகத்த
10. …………………………………………….

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1055/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 10
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1226
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 85/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: XII/161
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 20-3
அரசு	: பல்லவர்		
அரசன்	: கோப்பெருஞ்சிங்கன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் தெற்கு சுவரின் மேற்குப் பிரகாரம்.

குறிப்புரை : கூடல் ஆளப்பிறந்தான் தேவாரமழக்கியான் வாணராயன் என்பவன் கோயில் கணக்குகளை இதற்கு முந்திய ஆண்டுகளுக்கான 8-9 ஆண்டுகளில் வருவாய்க் கொண்டு சரிபார்த்துள்ளான். அப்படிச் சரிபார்த்து அரசனின் ஆணையின்படி அவ்விரு ஆண்டு வருவாய்த்தொகை இருநூறு ஆயிரம் (இலட்சம்) காசுகளைத் தனியாகப் பிரித்து தனி முதலாக வைத்துக்கொண்டு இதன் வருவாய்ப் பெருக்கத்தைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட கோயில் செலவுகளைச் செய்ய அமைத்து இருக்கிறான்.

Summary : On a south wall of the west prakara in the same temple. Pallava-Kōperunsiṅgan. 10th regnal year. 1226 C.E. Kudal Alappiranthan The varamazhakiyan Vanarayan, verified the accounts of the Adavallanayanar temple with the income for the previous 8-9 years.Having verified this, he has set aside two or three thousand (100,000) kashas of the revenue for those two years as a separate capital, as per the king's order, and has arranged to use the increase in revenue to meet specific temple expenses.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சி-
2. ங்கதேவற்கு யாண்டு ௰-ஆவது ஐயங்கெண்ட சோழ மண்டலத்-
3. து ஓய்மாநாட்டு மூரான இராஜநாராயணச் சருப்பேதிம-
4. ங்கலத்து உடையார் ஆடவல்ல நாயனாற்கு கூடல் ஆன
5. ப்பிறந்தாந் தேவாரமழகியானான வாணராயனேன்
6. இன்னாயனார் கோயில் எட்டாவது ஒன்பதாவதும்
7. தேவர் கணக்குக் கேட்டருளிக் கூட்டின காசில் நூறா-
8. யிரம் காசு குடலாக நீர்வார்த்துக் குடுத்தேன்.
9. கூடல் ஆளப்பிறந்தாந் தேவாரமழகியானான வாணராயர்

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1056/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 17
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1233
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 58/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 21
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராஜராஜன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகா மண்டபத்தின் முன் தெற்குப் பட்டி.

குறிப்புரை : கூற்றூர் கிழவன் திருவரங்கதேவன் ஒரு நந்தா விளக்கும் அவனது மனைவி (அகமுடையாள்) திருவானாள் ஒரு சந்தி விளக்கும் கொடை அளித்துள்ளனர். இவ்விளக்கு எரிவதற்கு வருவாய்க்காக இந்தக் கூற்றூர் கிழவன் சில நிலங்களை விலைக்கு வாங்கி கொடுத்துள்ளான். கல்வெட்டு சிதைந்துள்ளதால் நிலம் முழுவதும் தெரியவில்லை. எனினும் இந்த நிலம் திருபுவனமா தேவிவதிக்கு (பாடிகாவல்) அபிமானமேரு வாய்க்கால் ராமபிரான் பட்டன் நிலம் நம்பிபிரான் பட்டன் அவனைச் சார்ந்ததாகும். நிலத்தின் ஓர் பிரிவு 250 குழி மூன்று கழஞ்சுக்கு வாங்கப்பட்ட செய்தி தெரிகிறது. மொத்த நிலத்தின் அளவு 600 குழி என்றும் குறிப்பிடுகிறது.

Summary : On a south patti of the maha maṇḍapa in the same temple. Chōḻa-Rājarāja-III. 17th regnal year. 1233 C.E. A Man named Kuttrur Kilavan Thiruvarangathevan and his wife donated 600 Kuli lands for 2 perpetual lamps to this temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள்
2. ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு பதிநேழாவ-
3. து ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா
4. நாடான விஜையராஜேந்திர வளநாட்டு முஞ்னூரான ரா -
5. ஜநாராயணச் சதுர்ப்பேதி மங்கலத்து உடையார்
6. ஸ்ரீமூலஸ்தாநமுடையார்க்குக் கூற்றூர் கிழவந் திருவர-
7. ங்க தேவநேந் திரிநுந்தா விளக்கு ஒந்றுக்கும் இ-
8. வந் அகமுடையாள் திருவானாள் வைத்த சந்திவி-
9. ளக்கு ஒன்றுக்கும் கொண்டு விட்ட நிலமாவது

10. திருபுவனமா தேவிவதிக்குக் கிழக்கு[ம்] அபிமானமேரு
11. வா[ய்]க்காலுக்குத் தெற்கு இரண்டாங் கண்ணாற்று
12. முதற் சதிரத்து
13. [வடக்கடை]ய நிலம் நாலுமாவில் மேற்கு கடைய நிலம் ஒருமா வடக்கு கடை
14. வங்கிபுறத்து இராமபிராந் பட்ட நூற்றாட.......ல் பொந் நாற்கழை[ஞ்]சு ... நூறும்
15. இதிந் வடகிழக்கு அடையக்குழி ஐம்பதுகுழி பொன் அழகிய மஹாதேவி வதிக்கு கீழ்... அபிமாந
16. வாய்க்காலுக்கு தெற்கு இரண்டாங் கண்ணாற்று முதற்சதிரத்துத் தெற்கடைய நிலம் நாலுமாவில் கிழக்கு அடைய நிலம் ஒருமாவில் வடக்கு அடையப் புரவசேரி நம்பிப்பிராந்பட்டந் உள்ளிட்டார் பக்கல் பொந் முக்கழை -
17. ஞ்சுக்குக் கொண்ட குழி இருநூற்றைம்பது ஆக குழி ஆறு நூறுங் கைக்கொண்டு திரிநந்தா விளக்குக்கொந்றும் ஸந்தி விளக்கொன்றும் எரிக்கக்கடவோமானோம் இக்கோயிலில் சிவப்பிராமணந் பாரத்துவாசி கூத்தப்பட்டந் உள்ளிட்டோம்

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1057/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1255
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 80/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: XII/176
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 21-1
அரசு	: பல்லவர்		
அரசன்	: கோப்பெருஞ்சிங்கன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் தெற்குச்சுவரின் மேற்குப் பிரகாரம்.

குறிப்புரை : அம்பர் ஊரினன் ஆன மாதேவர் குலோதுங்கச் சோழவேளாண் 750 குழி அளவுள்ள நிலத்தை விலைக்கு வாங்கி ஆடவல்லநாயனார் கோயிலுக்குக் கொடுத்துள்ளான். இந்த நிலத்திற்கு 750-குழி நிலத்தொகுப்பு திருவிளக்குப்பட்டி என்று பெயர் இடப்பட்டது. இந்தத் திருவிளக்குப்பட்டி தெற்கு இரணியான் குழி 250 கீழ்முரண்டி குழி 350 தாழம்பட்டி குழி 150 என்று மூன்று பிரிவுகளாக மொத்தம் 750 குழிகள் இருந்தன. இந்தத் திருவிளக்குப் பட்டியினை ஆடவல்லநாயனார் கோயிலைச் சேர்ந்த சிவபிராமணர்கள் பெற்றுக்கொண்டு பத்து சந்திவிளக்குகள் ஐந்து நிலைவாயில்களில் எரிக்க ஒப்புக்கொண்டனர். ஆடவல்ல நாயனாரும் திருநாமத்துக் காணியும் தேவதான நிலம் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே கோயிலுக்கு உரிய நிலத்தை இவன் விலை கொடுத்து வாங்கிக் கோயில் சிவபிராமணர்களிடம் கொடுத்துள்ளான்.

Summary : On a south wall of the west prakara in the same temple. Pallava-Kōperunsiṅgan. 12th regnal year. 1228 C.E. Madhevar Kulothunga Cholavela, a Chola farmer from Amber, purchased a 750-kuzhi plot of land and donated it to the Adavallanayanar temple. This plot of land was named Thiruvilakkupatti, a 750-kuzhi plot of land.The Siva Brahmins of the Adavallanayanar temple accepted this Thiruvilakkupatti and agreed to light ten lamps at the five entrances.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீகோப் பெருஞ்சிங்கதேவற்கு யாண்டு ய௨-வது முஞ்னூரான இராசநாராயணச்சதுர்ப்-
2. பேதி மங்கலத்து உடையார் ஆடவல்லநாயனார்க்கு சோழ மண்டலத்து உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர்நாட்டு அ-
3. ம்பரில் அம்பருடையான் மாதேவன் குலோத்துங்சோழ மூவேந்தவேளானேந் நான் இட்ட அஞ்சு நிலைக் குத்திவிளக்குக்கு நான் வை-

4. த்த திருவிளக்குப் பத்தும் அந்தியம்பொழுது துடங்கி திருவொத்த சாமம் அறுதியாக எரிக்ககடவதான விளக்குக்கு நான் கொண்டு விட்ட
5. இன்னாயனார் திருநாமத்துக் காணியுந் தேவதானமுமான நிலத்தில் நான் விலைகொண்டுடைய திரைய்லோக்கியமாதேவி வதிக்கு கிழக்கு
6. அபிமானமெரு வாய்க்காலுக்கு தெற்கு யிரணியாந் குழி ஊருய கீழ்முரண்டி குழி ҕாருய தாழம்பட்டி என்று பெர் கூவப்பட்ட நிலம் குழி ாருய-ம்
7. ஆக குழி எாருய-இக்குழி எழுநூற்றைம்பதும் நான் விலை கொண்டப்படியே திருவிளக்கு பட்டியாக இக்கோயில்சிவப்பி
8. ராமணர் கைக்கொண்டு அந்தியம்பொழுது துடங்கி திருவொத்தசாம மறுதியாக எரிக்கடகவதாக இப்படிக்கு சந்திராதித்தவரை எ-
9. ரிக்கடவர்களாக இசைந்தபடியே திருவிளக்குப்பட்டியாக இந்நிலம் கொண்டு விட்டேன் உடையார் ஆடவல்ல நாயனாற்க்கு குலோ-
10. த்துங்சோழ மூவேந்தவேளானேன்

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1058/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 10
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 61/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 22
அரசு	: சோழர்		
அரசன்	: இராஜராஜன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகா மண்டபத்தின் வலது நுழைவுவாயில்.

குறிப்புரை : ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்காக புலியூர் நாட்டு பேரூரைச் சேர்த்த கிழவன் மகன் சூற்றிய தேவன் என்பவன் நான்கு பசுக்களைக் கொடுத்துள்ளான்.

Summary : On a south patti of the maha maṇḍapa in the same temple. Chōḻa-Ṛājarāja-III. 10th regnal year. In the reign of the king, Aman named Ṣuṭṭriya Dēvan, who had joined Perūr in Puliyūr, donated four cows to light a lamp at the main temple of Thirumoolathanamūḍaiyār.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்-
2. த்திகள் ஸ்ரீராஜ ராஜதேவற்கு யா-
3. ண்டு ய ஆவது ஜெயங்கொண்ட சோ[ழ]
4. மண்டலத்து ஓய்மாநாடான விஜைய
5. ராஜேந்திர வளநாட்டு முஞ்ஞூரான ராஜ
6. நாராயணச் சதுர்வேதி மங்கலத்து உடை-
7. யார் ஸ்ரீமூலஸ்தான முடையார்க்குப் புலியூர்க் கோ-
8. ட்டத்துப் பேறூர்ப் பேறூர் கிழவந் மகந் சூற்றி-
9. ய தேவனான பல்லவனேன் வைத்த ஸ -
10. ந்தி விளக்கு நெய் ஒந்றுக்கு பசு நான்ம ...
11. இந்நாலுங் கைக்கொண்டு ஸந்திராதித்தவ -
12. ரை செலுத்தக் கடவோம் இக்கோயிலில் சிவ-
13. பிராமணரோம் இது பந்ஶாஹேமஸ்ர
14. ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை *தொடர்எண் : 1059/2023*

மாவட்டம்	: விழுப்புரம்	ஆட்சி ஆண்டு	: 8
வட்டம்	: திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1224
ஊர்	: முன்னூர்	இ.க. ஆண்டறிக்கை	: 59/1919
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 24
அரசு	: சோழர்		
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : ஆடவல்லீசுவரர் கோயில் மகா மண்டபத்தின் முன் கிழக்கு முப்பட்டை குமுதம்.

குறிப்புரை : செய்யூரிலிருக்கும் திட்டைச்சேரியைச் சேர்ந்த உடைய நாயகன் ஒற்றிக்கொண்டான் என்பவன் அன்றாடு நற்காசு கொடுத்து ஒரு குறிப்பிட்ட நிலம் சபையாரிடம் வாங்கிக் கொடுத்துள்ளான். இந்நில வருவாயைக் கொண்டு இறைவன் அமாவாசை தோறும் வீதி உலா செல்ல வகை செய்யப்பட்டுள்ளது.

Summary : On a east muppattai kumudha of the maha maṇḍapa in the same temple. Chōḻa- Rājarāja-III. 8th regnal year. 1224 C.E.A man named Udayanayakam Oṭṭrikkoṇḍāṉ from Thittaicherry in Seyyur has bought a certain piece of land from the congregation by giving a daily donation to the deity. With the income from this land, the deity is allowed to walk the streets every new moon.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனநச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு அ எட்டாவது ஜெயங்கொ-
2. ண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாடான விஜையராஜேந்திர வளநாட்டு முஞ்ஞூறான ராஜ-
